பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ 2/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஆனி மீ 21 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்ஜா பிறை 20 (05 – 07 – 1988) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 123

PERSONAL CLASSES
for O/L MATHS
ஆசிரியர்.
T. தயாபரன்
O/L Dec 88 MATHS
புதிய பிரிவு ஆரம்பம்:
5-7-88 (5.15 p.m.)
இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம்.
(யாழ்.)

PERSONAL CLASSES
for PHYSICS
ஆசிரியர்: R. சத்தியசீலன்
A/L 90 அளவிடுகள்,
ஒளியியல்
ஆரம்பம்: 15-7-88(3.15p.m.)
A/L 89 புலங்கள்
ஆரம்பம்: 15-7-88(4.15 p.m.)
இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம் (யாழ்).

★ சென்னைப் பேச்சு தொடர்கிறது

ஜே. ஆர். டிராம் அவசரத் தூது!

இணைப்புப் பிரகடனத்தை வலியுறுத்த வந்ததாகத் தகவல்

— கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 5

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம், இந்திய அரசின் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாக அவசரத் தூது வந்தார், சென்னை 'இந்து' பத்திரிகையின் இணையாசிரியர் திரு. என். ராம்.

அவர் ஜனாதிபதியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சந்தித்துப் பேசிவிட்டு அவசரமாக நேற்றுச் சென்னை திரும்பினார்.

வந்த கையோடு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்த திரு. ராம் வடக்கு, கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை வெளியிடுமாறு ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவை இந்திய அரசின் தரப்பில் வலியுறுத்தியதாக அறிய வந்தது.

அவரது அவசர விஜயத்தின் நோக்கம் அதுவாகவே இருந்தது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இதனிடையில் இந்திய அரச அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நேற்றும் சென்னையில் தொடர்ந்து நடைபெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சென்னைப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் புதிதாக காணப்படவில்லை என்று இந்தியத் தூதரகத்துடன்தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு, இணக்க நிலை உருவாக வேண்டுமானால், முதலில்- வடக்கு, கிழக்கு

(8-ஆம் பக்கம் பார்க்க)

விடுதலை [illegible]

யாழ். செயலகத்துக்கு உணவு முத்திரைகள் வந்து விட்டன

எனினும் விநியோகம் தாமதமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

புதிய உணவுமுத்திரைகள் அனைத்தும் யாழ். செயலகத்தை வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த உணவுமுத்திரை கடந்த ஏப்ரல்மாதத்தில் விநியோகிக்கப்படவேண்டியதாகும். ஆனால் நற்போதைய சாதகமற்ற சூழ்நிலையால் உணவுமுத்திரைவந்துசேர தாமதம் ஏற்பட்டது.

மேலும் தற்பொழுது குடாநாட்டில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், திராம சேவகர் அலுவலகங்கள் ஆகியன இயங்காமையினால் உணவு முத்திரை விநியோகம் தாமதமடையலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

எனினும் மேலாதம் முதலான நிலுவைப் பொருள்கள், உணவு முத்திரை வழங்கப்படும் மாதத்தில் சேர்த்து வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-9)

கூட்டணி - ரெலோ பிரமுகர்கள் பேச்சு

கடந்த வெள்ளியன்று நடந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 5

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அரசியற்குழு பிரமுகர்களுக்கும் இடையே கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், ''ரெலோ''வின் சார்பில் வன்னிப் பிராந்திய அரசியற்பொறுப்பாளர் திரு. கு. உதயன், கொழும்பு அரசியல் பொறுப்பாளர் திரு. ஆனந்தன், அரசியல் பேச்சாளர் திரு. சங்கர் ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

★ வடக்கு, கிழக்கு மக்களின் எண்ணப்பிரதிபலிப்பு, இயக்கங்களின் தற்போதைய, எதிர்கால நடவடிக்கைகள்.

★ இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் முன்னரும் பின்னரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலை

(8-ஆம் பக்கம் பார்க்க)

யாழ். தபாலகம் வந்த ரூ.40,000 பெறுமதியான முத்திரைகள் எங்கே, எங்கே?

யாழ்ப்பாணம், ஜூலை 5

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோருக்கு அனுப்பப்பட்ட தபாற் பொதியில் இருந்து 40 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான முத்திரைகள் எங்கே? கையாடியது யார்?

கடந்த மாதம் 25ஆம் திகதி இந்த தபால் பொதி கொழும்பில் இருந்து ரயில் மூலம் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு, பின்னர் பஸ் மூலம் யாழ். பெரிய தபால் கந்தோருக்குக் கொண்டுவரப்பட்டது.

யாழ். தபால் நிலையத்தில் பொதியைப் பிரித்து முத்திரைகளைத் தபாலக உயரதிகாரிகள் எண்ணெடுத்த பொழுது 40 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான முத்திரைகள் காணாமல் போயிருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பாக யாழ் பெரிய தபால் கந்தோரிலும், கொழும்பு தபால் அலுவலகத்திலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-10)

24 மணி நேரத்தில் ஆறு ஜவான்கள் பலி!

கடந்த 24 மணித்தியாலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடந்த மோதல்களில் இந்திய அமைதிப்படை ஜவான்கள் ஆறு பேரும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூன்று பேரும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

முல்லைத்தீவில் நடந்த மோதலில் மூன்று இந்திய அமைதிப்படை ஜவான்களும் இரண்டு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் இரண்டு சிவிலியன்களும் உயிரிழந்தனர்.

ஒரு பெண்ணும் அவரின் குழந்தையுமே உயிரிழந்த சிவிலியன்கள் ஆவர்.

வவுனியாவில் நடந்த மோதலில் இரண்டு இந்திய ஜவான்களும் ஒரு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியும் உயிரிழந்தனர். 4 ஜவான்கள் காயமடைந்தனர்.

காத்தான்குடியில் நடந்த மோதலில் ஒரு ஜவான் உயிரிழந்தார்.

(முதலில் வந்த செய்தி ஏனைய 8 ஆம் பக்கத்தில்)

விமானம் மீது ஏவுகணைத் தாக்கு:

அமெரிக்கா கூறும் காரணம்; ஈரான் நிராகரிப்பு

தெஹ்ரான், ஜூலை 4

ஈரான்பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதற்குஅமெரிக்காகூறிய காரணத்தை ஈரான் அரசு நிராகரித்து விட்டது.

விமானத்தின் மீதுஏவுகணைத்தாக்குதலை நடத்திய அமெரிக்கப் போர்க்கப்பலின் கமாண்டரை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தும்படி ஈரான், அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

மனிதஇனத்துக்குஎதிராகச்செய்யப்பட்ட மிருகத்தனமான நடவடிக்கை என்று ஈரான்அரசு மேலும் வர்ணித்தது.

உயிரிழந்தவர்களில் தெஹ்ரானில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றி வந்த இராணுவ ஆலோசகரும் அவர் குடும்பமும் அடங்குகின்றது என்று தெஹ்ரானில் அறிவிக்கப்பட்டது.

ஏவுகணைத் தாக்குதலால் ஏற்பட்ட அனர்த்தம் குறித்து அமெரிக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

அப்ப, தோலிருக்க சுளை விழுங்கியள் தபாற் பகுதியிலை இருக்கினமோ, இடைவழியிலை இருந்தினமோ எண்டதை எப்படிக் கண்டு பிடிக்கப்போகினம் பாருங்கோ——?

இலங்கை கடற்பகுதியிலிருந்து

இந்திய கடற்படை விரைவில் விலக்கப்படும்

தளபதி சென்னையில் கருத்து

சென்னை, ஜூலை 5

இலங்கையின் கடற்பகுதிகளில் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய கடற்படை கூடிய விரைவில் விலக்கிக் கொள்ளப்படும்

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமைத் தளபதி எஸ். சி. சொப்ரா சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி காக்கும் பணி உள்ளிட்ட பல பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கப்பல்கள் இன்னும் சிறிது காலத்துக்கே அங்கு அப்பணிகளில் ஈடுபடுத்தப்படலாம்.

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விரைவாகத்தேர்தல்நடத்தி முடிக்கப்பட்டுவிட்டால், தற்போது அங்குள்ள நமது ராணுவத்தினரைத் திரும்ப அழைத்துக்கொள்ளும் பணி முடிய ஆறு மாதங்களாகக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4)

வடக்கு - கிழக்கு வந்த 6 கோடி டாலர் ஆபிரிக்கா போகிறது!

மூன்று கோடி ஏற்கனவே ஆப்கனிஸ்தானுக்கு மாற்றம்

— அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம் ஜூலை 5

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்நிர்மாணத்துக்கென, அமெரிக்க உதவி நிறுவனம் வழங்கிய ஒன்பது கோடி டாலர் (சுமார் 297 கோடி ரூபா) தக்கமுறையில் ஸ்ரீலங்கா அரசால் பயன்படுத்தப்படவில்லை.

அதனால் அந்த நிதி ஒஹக்கிட்டில், ஆறு கோடி டாலர் ஏற்கனவே ஆப்கனிஸ்தானில் மறுவாழ்வுப் பணிகளுக்கு மாற்றப்பட்டு விட்டது.

மிகுதி ஆறுகோடி டாலர்களும், ஆபிரிக்க நாடுகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த மாற்றப்படும் ஆபத்தும் தோன்றி உள்ளது.

அபிவிருத்திஅடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் அமெரிக்க உதவி நிறுவனம், வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதற்கென 9கோடி டாலரை ஸ்ரீலங்கா அரசுக்கு ஒதுக்கி இருந்தது.

இரண்டு பிரதேசங்களிலும் புனர் நிர்மாண வேலைகளைச் செய்யக் கூடிய சூழ்நிலை இல்லை என்ற காரணத்தைக் காட்டி, ஸ்ரீலங்கா அரசு அந்த நிதியைப் பயன்படுத்தத் தொடங்காது தாமதித்து வந்தது.

அதனைத் தொடர்ந்து ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 3கோடிடாலரை பிரஸ்தாப உதவி நிறுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஆறு நாட்டுத் தூதுவர்களின் யாழ். விஜயம் திடீர் ஒத்திவைப்பு!

காரணம் என்ன?

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். நகருக்கு நேற்று விஜயம் செய்ய இருந்த ஆறு நாடுகளின் தூதுவர்களின் பயணம்இறுதி நேரத்தில் ஒத்திப்போடப்பட்டது.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, டென்மார்க் ஆகிய ஆறு நாடுகளைச்சேர்ந்த தூதுவர்களே நேற்று யாழ். நகருக்கு விஜயம் மேற்கொள்ள இருந்தனர்.

இவர்கள் தமது பயணத்தின் போது யாழ்மாவட்டத்தில் பாதிப்புகள் பலவற்றையும் பார்வையிடுவதுடன்— இலங்கை– இந்திய இராணுவ நடவடிக்கைகளால் இரு தடவைகள் பாதிக்கப்பட்டது என்றரீதியில் வடமராட்சிப் பகுதியை விசேடமாக சென்று பார்வையிடவும் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் இறுதி நேரத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களின் யாழ்ப்பாண விஜயம் ஒத்திப்போடப்பட்டது.

தூதுவர்களின் இறுதி நேர ஒத்திவைப்புக்குச் சரியான காரணம் தெரிவிக்கப்படவில்லை. எனினும் பாதுகாப்பு ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயமே என்று சொல்

(8ஆம் பக்கம் பார்க்க)

மில்லரின் நினைவாக இரத்த தானமும் சமய நிகழ்ச்சிகளும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கரும்புலி சப்டன் மில்லரின் ஓராண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று நெல்லியடியில் சமய நிகழ்ச்சிகளும் இரத்த தானமும் நடைபெறவுள்ளன.

கடந்த வருடம் ஜூலை 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது கரும்புலி சப்டன் மில்லர் வீரமரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

நினைவுநாளை முன்னிட்டு 'அதிர்ச்சி மிக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

05 – 07 – 1988
ஆனி 21
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10–28 முதல் 11–58 வரை
ராகுகாலம்:
02–58 முதல் 04–28வரை

இவை பகலுக்கும்இரவுக்கும் பொருந்தும்.

இயக்கங்களுக்கு இடையே ஒற்றுமைக்கான பேச்சு

வவுனியாவில் நடந்தது

யாழ்ப்பாணம், ஜூலை. 5

இயக்கங்களுக்கு இடையே ஒற்றுமையை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தை ஒன்று அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளை இந்திய அமைதிப்படையினர் ஏற்பாடு செய்திருந்தனர் என அறியவந்தது.

பிரஸ்தாப பேச்சுவார்த்தைகளில் ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, புளொட் உறுப்பினர்களும் அமைதிப்படை

(8 ஆம் பக்கம் பார்க்க)

3 தினங்களில் 11 பேர் கொலை

கொழும்பு, ஜூலை 5

தென் இலங்கையில் தென், மத்திய மாகாணங்களில் கடந்த 3 தினங்களில் 11பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (ஒ-ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பிறவுன் சேவற்குஞ்சுகள் 6ஆம் திகதி புதன்கிழமையும் புறொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) 15ம் திகதி வெள்ளிக்கிழமையும் 16ம்திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (4886)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் சட்டில் மெத்தைகள் கசற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அலுமாரி கடைசோகேஸ் கண்ணாடி மேசை கம்பளம், ஹோல்செற், விழுந்தைக் கதிரைகள், ஸ்ரீல் அலுமாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அலுமாரி Imported Mattress மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக்ஸ் சந்தியருகில். [4588]

மூசல் கார் விற்பனை

நல்லநிலையில் உள்ள Morris Oxford மூசல் கார் விற்பனைக்கு உண்டு. காலை 7 முதல் 8வரை; மாலை 5 முதல் 6 மணிவரை பார்வையிடலாம். J. S. M. சாமுவேல், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. (4883)

காணி விற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகாமையில் வழிவாய்க்கால் கிணற்றுப்பங்கு வசதிகளுடன் உள்ள 5 பரப்பு வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு விலாசம்: V. நல்லையா, அளவெட்டி. (4891)

உடுவில் மகளிர் பாடசாலைக்கு 200யார் தூரத்தில் டச் றோட்டில் சகல வசதி கொண்ட 4 பரப்பு காணி உடன் விற்பனைக்குஉண்டு. தொடர்பு விலாசம்: J. T. வின்சிலோ, C/o டாக்டர் செல்வச்சந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (4890)

சின சஞ்சிகை

மாணவர்களின் 'ஒப்படை' பாடத்திட்டத்திற்கு பெரிதும்பயன்படும் சைனா பிக்ரோறியல் (China Pictorial) எம்மிடம் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. யாழ். புத்தக நிலையம் (பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு முன்னால்)413, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4888]

திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான றேடியோ, வீடியோ டெக், T. V. மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின்மோட்டர்கள், றைஸ்குக்கர், சுமிற், மொலினெக்ஸ் கிறைன்டர்கள், எலக்ரோனிக் கல்குலேற்றர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள். விக்டர் அன்சன்ஸ் (விக்ரேஸ்) 100 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C/5594

விற்பனைக்கு

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ கெட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களுக்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும்,விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

புதிய நாவல் வெளிவந்து விட்டது

செங்கை ஆழியானின் புதிய நாவல் தீம்தரிகிடதோம் வெளிவந்து விட்டது. விலை ரூபா15/– கிடைக்கும் இடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4579)

பாடல் பதிவு செய்தல்

நீங்கள் விரும்பும் மதுரமான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து கொள்ளவும் நாற்பது இனியிரத்திற்கு மேற்பட்ட மிகபழைய புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும், நாடுங்கள்: விக்டர் அன்சன்ஸ் 100, ஸ்ரான்லி வீதி, விக்ரேஸ் மியூசிக் சென்ரர் 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, விக்டர் அன்சன்ஸ் 81, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். (C.5596)

புதிய உயர் கல்லூரி

G.C.E. O/L
Day Classes
Evening Classes

ஆரம்பம்- 15 - 7 - 88

காலை 8 மணி – மாலை 4 மணி

SPOKEN ENGLISH
With GRAMMAR
BRITTO

2 ஆம் பிரிவு ஆரம்பம்

விபரங்களுக்கு,
S. அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C 5659)

தேவை

எமது நிறுவனத்திற்கு பியோன், லிஃதர் ஆகியோர் தேவை. 30 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் 8-7-88 காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A.S.சங்கரப்பிள்ளை கட்டடம்-1ஆம் மாடி)
[சி 5665]

6ஆவது மாத நினைவஞ்சலி



கந்தையா – பரமேஸ்வரி
(குடும்ப நல சேவையாளர் அக்கராயன்குளம்)

தோற்றம்: 21 - 8 - 1959 மறைவு: 10 – 2 – 1988

ஆருகி விழி நதும்பி
ஆருமல் அழுத எங்கள்
நீருகும் நெஞ்சமாய்
நீ விட்டுச் சென்றாய்
மண்ணகத்தில் நீ செய்த நற் சேவை
மாவிடர்க்குப் போது மென்று
விண்ணகத்தில் சேவை செய்ய
விரைந்து சென்றாய்
விண்ணகத்தில் சாந்தியுற
வல்ல ஈசன் பதம் பணிந்தோம்
வாழ் வென்ற காலமெல்லாம்
வாழ்ந்திடுவோம் உன் நினைவால்

இன்று செவ்வாய்க்கிழமை காலை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் நாளை புதன்கிழமை வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்தி, மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், உடன் பிறந்தோர்,
அத்தான்மார், அண்ணி,
உற்றார், உறவினர்.

314, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி. (5178)

5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி. சாந்தினி தர்மகுலசிங்கம்
(ஒட்டுசுட்டான்/ முத்தையன்கட்டு லக்ஷ்மிரேடிங்சென்ரர் உரிமையாளரின் அன்புமனைவி)

மலர்வு: 5. 05. 1958 உதிர்வு: 30. 6. 1983

திதி: 5. 07. 88

சாந்தியே உனைப்பிரிந்து ஆண்டு ஐந்து
ஆனதுவோ
(உன்) அன்பான அணைப்பென்றும் ஆறாத
வேதனையோ
உன்னையே துணையாக்கி இவ் வையகத்தில்
வாழ்ந்தாயே
ஊர்போற்றும் நிலைக்கென்னை உயர்த்தியே
நின்றாயே
உன்னையிழந்து துடிக்கிறேன் உணர்வுகள்
சோர வாழ்கிறேன்
என்னையே தனியாக்கி வேறுலகேன் சென்றாய்?
உண்மை நீ உயிரும் நீ உத்தமத்திலாம் நீ
உனையன்றி உலகத்தில் உவப்பேதுளனக்கின்று

இன்று 5. 07. 88 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புக் கணவர் அ. த. தர்மகுலசிங்கம்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

பழையமாளிகை
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

வலி-கிழக்கு.தெ.ப.ப.நோ.கூ. சங்கம்

லொறி இல. 26/5777 திருத்தத்திற்கான
கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்க லொறிக்கு பின்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கேள்வி விண்ணப்பங்கள் வடி சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் எதிர்வரும் 15.07.88 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், ''பொது முகாமையாளர், வலி-கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன், விண்ணப்ப உறையின்இடதுபக்க மேல் மூலையில் ''லொறித் திருத்தத்திற்கான கேள்வி விண்ணப்பம்'' எனக்குறிப்பிட்டு, நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலமாக அரக்கு மெழுகு இட்டு அனுப்புதல் வேண்டும்.

லொறியைப் பார்வையிடவிரும்புவோர், சந்தோர் கடமைநேரங்களில் பார்வையிடலாம். திருத்த வேலை விபரம்—

1. எஞ்சின் வேலை 2. ரிங்கர் வேலை
3. வயரிங் வேலை 4. பொடி அமைத்தல்.

–பொது முகாமையாளர்

நீர்வேலி,
1988-07-02 (C 5664)

கடத்தப்பட்ட தொண்டன்
திரு.கந்தையா கந்தசாமியை
விடுவிக்குமாறு
வலி வடக்கு பிரஜைகள் குழுக்கள் ஒன்றியம்
வேண்டுகோள்

அல்லலுறும் ஈழத்தவரின் துயர் துடைக்கும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மனித உரிமைகள் இல்லம் போன்ற பல தொண்டர் ஸ்தாபனங்களை நிறுவ முன்னின்று உழைத்த உத்தமர் திரு. க. கந்தசாமியை எதுவித தீங்குமின்றி உடனடியாக விடுவிக்குமாறு வலி வடக்கு பிரஜைகள் குழுக்கள் ஒன்றியம் சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றது.

ஈழத்தவர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை உலகறியச் செய்ய இலண்டனில் ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதில்பணியாற்றி அண்மையில் தாயகம் திரும்பி உடல் நலிந்த நிலையிலும் உறுதி தளராதுவடக்குக்கும் கிழக்குக்கும் ஓடிஓடி பணியாற்றிய அந்த மா மனிதன் எங்கள்மண்ணின் மைந்தன் எதற்காகக் கடத்தப்பட்டார்? நல்லது செய்யும் மனிதர்களுக்குதமிழ்மண்ணில்இடமில்லையா?

(5176)

சேவ்ரி ரவல்ஸ்
நீடிப்புச் சேவை

எமது வழமையான நீடிப்புச்சேவை
06-07-1988 நாளை முதல்
'பண்டத்தரிப்பு' வரை
விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நீடிப்புச் சேவையில் பஸ் தரிப்பிடங்கள்:

வட்டுக்கோட்டைச் சந்தி, சங்கரத்தைச் சந்தி, மாவடிச் சந்தி, மூளாய் ஆஸ்பத்திரிச் சந்தி, சுழிபுரம், தொல்புரம், சித்தங்கேணி, பண்டத்தரிப்புச் சந்தி

கிளைக்காரியாலயம்;
சங்கானை, சங்கானை பஸ்தரிப்பு நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி, மானிப்பாய் பஸ் தரிப்பு நிலையம், மல்லிகா ஹோட்டல்.

ஆசனப் பதிவிடங்கள்:

கிளைக் காரியாலயம்
★ சேவ்ரி ரவல்ஸ் M.P.C.S அருகில் சங்கானை.
★ கி. சுந்தரம்பிள்ளை (நியூஸ் ஏஜன்ட்) சைவானந்த கிளைப் பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
★ மல்லிகா ஹோட்டல் ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

தொடர்புகளுக்கு:
தலைமைக் காரியாலயம்
சேவ்ரி ரவல்ஸ்
102, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5656)

எமது நேற்றைய புதிய வெளியீடு

பாண்டியராஜன் — S. V. சேகர் — ரேகா
"கதாநாயகன்"
(PRAMID ORIGINAL)

ஏனைய இவ்வார வெளியீடுகள்:
1. வேள்ளிக்கிழமை விரதம்
2. கலங்கரை விளக்கம்
3. எங்க மாமா
4. 6இல் இருந்து 60 வரை
5. கவலை இல்லாத மனிதன்
6. இராமாயணம்-II
7. RAMBO - III

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 5661)

31ஆம் நாள் நினைவஞ்சலி

விடுதலை வேங்கை
செல்வன்
ஆறுமுகம் கோணேஸ்வரன்
(கோணேஸ்)

இடம்: புளியம்பொக்கணை

தோற்றம்: 26. 5. 1968 மறைவு: 06. 06. 1988

பட்டாளத்தார்வரை பயந்தோட
விரட்டிவிட்டு சிட்டாகிப் பறந்தாயே!

வீரவேங்கை கோணேஸுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி!
(5177) – நண்பர்கள்

மறைவின் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் D. சேனாதிராஜா குருஸ்
M.H.D.I கும்பகோணம் L.C.O இலங்கை
(பல் கட்டுபவர்
கண்பரிசோதித்துக் கண்ணாடி கொடுப்பவர்)
இல.104,1ஆம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்

மலர்வு 13-06-1937 மறைவு 05-07-1982

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அன்புடன் ஆதரித்த எம் தெய்வமே! எம்மை சடுதியாய் ஆறாத்துயரில் ஆழ்த்தி ஆறு ஆண்டுகள் மறைந்தாலும் இருள் சூழ்ந்த கடந்த காலங்களில் தெய்வமாய் நின்று எங்களைக் காத்த எம் குல விளக்கே! உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், சகோதர
சகோதரிகள், மைத்துனன்மார்
மைத்துனிமார் மற்றும்
உறவினர்கள்.

இல. 104, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (5780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வங்கியின் உதவியுடன்

வவுனியா - யாழ்ப்பாண வீதி அகலமாக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

உலகவங்கியின் உதவியுடன் வவுனியா—யாழ் வீதி திருத்தப்பட்டு 5 மீற்றர் அகலத்தில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

வீதி அமைப்பு அதிகாரசபையின்ஆலோசனையின்கீழ், ''வீதி அமைப்பு அபிவிருத்திக் கம்பனி'' இதனை மேற்கொள்கிறது.

10 கோடி ரூபா செலவு மதிப்பிடப்பட்டுள்ள இந்த வேலைக்கான திட்ட நடவடிக்கைகளை அண்மையில் உலகவங்கி நிபுணர்குழு ஒன்று பார்வையிட்டுச் சென்றது.

வவுனியா சச்சேரியில் இதற்கான மாநாடு ஒன்றும் நடைபெற்றது.

இந்த வேலைகளுக்கென, கல்கமுவவிலிருந்து கற்கள் எடுக்கப்பட்டுள்ள போதிலும், இனிமேல் ஓமந்தையில் இருந்தே கல் பெறப்படும்.

இந்திய சமாதானப் படையினர் கல்லுடைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

பிரஸ்தாப கம்பனியே கம் உதாவ திட்டத்தில் ஆனமடுவவிலும்,சமனலவெவ திட்டத்தின் கீழ் இரத்தினபுரியிலும் புதிய வீதிகளை அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

லொறி கடத்தப்பட்டது

ஒட்டுசுட்டான் ஜூலை 5

ஒட்டுசுட்டான் வர்த்தகர்களுக்கு லொறியில் ஏற்றிச் சென்ற பொருள்கள், வவுனியா நகரில் வைத்து இனந்தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமைஇடம் பெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

ஒட்டுசுட்டான் வர்த்தகர்களுக்கு வவுனியாவில் உள்ள கடைகளில் நுகர்ச்சிப் பொருள்களை கொள்வளவு செய்து கொண்டு நகரில் இருந்து லொறி ஒன்று புறப்படத் தயாரானது. அப்பொழுது ஒரு கோஷ்டி ஆயுதமுனையில் வாகனத்தை நிறுத்தி பலவந்தமாக சாரதியையும் ஏனையோரையும் வெளியில் இழுத்து எடுத்த பின்னர் அவர்கள் லொறியைக் கடத்திச் சென்றனர். (ஒ – 113)

இலவச மருத்துவ சிகிச்சை

பருத்தித்துறை, ஜூலை.5

அண்மையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 400 மாணவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது:

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் டாக்டர் க. லலித்குமார் இந்த மருத்துவ சிகிச்சை முகாமை நடத்தினர். (இ-சி)

தேர்தல் பற்றி ஆராயப்பட்டதாம்

மட்டக்களப்பு, ஜூலை. 5

மட்டக்களப்பு கச்சேரி தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி அண்மையில் இந்தியப் படை முகாமுக்கு அழைக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகள் குறித்து அவருடன் ஆராயப்பட்டதாக தெரிய வருகிறது.

உபதளபதி நாடு திரும்பினர்

கொழும்பு ஜூலை 5

இந்திய இராணுவ உபதளபதி லெப்டினன்ட் ஜெனரல் எஸ். எஸ். ரொட்ரிகஸ் கடந்த வியாழன் இந்தியா திரும்பினர்.

மூன்று தினங்களாக அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்திய அமைதிப்படை தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். (ஒ-எ)

தென்னிலங்கையில் 4 படை அணிகள்

கொழும்பு, ஜூலை 5

தென் இலங்கையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் நான்கு படை அணிகள் நிறுத்தப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

காலி, அம்பாறை, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் இந்த அணிகளின் தலைமைக் காரியாலயங்கள் அமையும். (ஒ-எ)

கைதிகள் புனர்வாழ்வு முகாமில் உள்ள 37பேர் பரீட்சை எழுதுகின்றனர்

காங்கேசன்துறைஜூலை5

காங்கேசன் துறை கைதிகள் புனர்வாழ்வு முகாமில் இருப்போரில் 37 பரீட்சார்த்திகள் தற்போது நடைபெற்று வரும் ஜீ. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து ஏற்பட்ட அசம்பாவித சூழ்நிலைகளால் இந்திய அமைதிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்குமுகமாக காங்கேசன்துறையில் ஏற்படுத்தப்பட்ட கைதிகள் புனர் வாழ்வு முகாமில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கைதிகளில் ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு தோற்று வேண்டிய மாணவர்களும் பலர் அடங்கியிருந்தமையால் அவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன்படி மேற்படி புனர் வாழ்வு முகாமில் பரீட்சை நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது

இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த மேஜர். சந்திரநாத் இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். (ஒ-68)

சிறுவர் நம்பிக்கை நிதியம் திருமலையில்ரூ.2லட்சம் உதவி

திருகோணமலை, ஜூலை 5

திருகோணமலை இந்து இளைஞர் பேரவையின் வேண்டுகோளுக் கிணங்க சிறுவர் நம்பிக்கை நிதியம் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அகதிகளுக்கு வழங்கியுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளின் சீருடைக்கானதுணி வகைகள், அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள், மற்றும் அலுமினியப் பாத்திரங்கள், பிளாஸ்டிக் பாத்திரங்கள் ஆகியன நன்கொடையாக வழங்கப்பட்டபொருள்களில் சில ஆகும்.

இவை இ.இ. பேரவையினரால் மூதூர், குச்சவெளி போன்ற பகுதிகளிலுள்ள அகதிகளுக்கு வழங்கப்படவுள்ளன. (இ–150)

ஓராண்டு நினைவஞ்சலி

பொன்னையா கிருஷ்ணபிள்ளை

(விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்)

மலர்வு: 2. 8. 1923 உதிர்வு 5. 7. 1987

கிருஷ்ணபிள்ளை மாணிக்கம்

மலர்வு: 25. 5. 1926 உதிர்வு: 5. 7. 1987

குண்டுதான் வாயைத் திறந்தே சிரித்தது
உண்டென இருந்தவர் பொய்யெனப் போனீர்!
கண்டுநாம் அழுதோம் கலங்கியே தொழுதோம்
காற்றின் மண்டலம் கடந்து ஒன்றுனீர்!
நாளை இம்மண்ணில் விடுதலைப் பூக்கள்
சூடிடவென்றே நல்லுரம் ஆனீர்!
வேளை தோறும் நினைந்து நினைந்தே!
விழியின் நீரால் நெஞ்சை நனைந்தோம்

வியாழாவத்தை, நெல்லியடி, கரவெட்டி. மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (5168)

முதலாண்டு நினைவஞ்சலி

கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் - துன்னாலை)



தோழனே!
1987 மே 26
எமது மண்ணின் இருண்ட வாழ்வின்
புதிய அத்தியாயத்தின் தொடக்கமது
சடசடக்கும் துப்பாக்கி வேட்டுக்கள்
வானதிரும் செல் சத்தம்
தலைக்கு மேல் இரையும் பொம்மர்கள்
எங்கும் இன்னுமோர் குருசேத்திரம்
நாம் நடந்த வீதியும் மணல் ஒழுங்கையும்
எமது வயல் நிலமும் பனைமரங்களும்
அனைத்தும் அனைத்தும்
அடுத்தவனால் ஆக்கிரமிக்கப்பட்டன.

ஆனாலும்
1987 யூலை 05
நெல்லியடி முகாமில் எக்காளமிடுநின்ற
இராணுவம் தூள்தூளாக்கப்பட்டன
விடிவெள்ளி கிழக்கே தெரிந்தது
இலக்கியம் சொன்ன
பலஸ்தீனம் கண்ட போராளியை
ஈழத்திலும் கண்டோம்
இன்னல்கள் நிறைந்த எம்மவர் வாழ்வில்
இடர் நீக்க முதற் ''சரும்புலியாய்''
வெடி மருந்துடன் காற்றில் கலந்தாய்
நாம் சுதந்திர வானில் பறப்பதற்காய்
உயிர்ச் சிறகையே ஒடித்துக்கொண்டாய்
உன் வாழ்வின் முடிவு கண்டு
ஈழமே சிலிர்த்ததடா
காலைப் பரிதியாய் நீ ஒளிர்கின்றாய்
காற்றும் மண்ணும் கடலும்
வானுமாய் நீ நிறைகின்றாய்
உன் நினைவுகள் உலகுக்காகவே
என்றும் எம்முள்ளத்தில் நிலைத்திருக்கும்
நீ வானத்து நட்சத்திரமல்ல
வையத்து நிகழ்பூ. நீ வாழ்க.

மரணத்தை நாம் மகிழ்ச்சியுடன் தழுவிக்கொள்கிறோம். இதனால் எம்மக்கள் விடுதலையடைவார்கள்- என்பதால்.

— மில்லர்.

தாயின் மடியில்:
1966-01-01

துன்னாலை.

தாயக விடுதலை
1987-07-05

-நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் வாயை, ராஜீவ் அடைக்காவிட்டால்

காங்கிரஸ் கட்டுப்பணம் பறிபோகும்!

கருணாநிதி பேச்சு

ராமநாதபுரம், ஜூலை4

சிதம்பரம் வாயை ராஜீவ் அடைக்காவிட்டால் தமிழ்நாடு முழுவதும் காங்கிரசுக்கு 'டெபாசிட்' பறிபோகும் என்று கருணாநிதி எச்சரித்து உள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. தேர்தல் நிதியளிப்பு கூட்டம் மண்டபம் நகரில் நடந்தது.

தி. மு. கழக தலைவர் கருணாநிதி இதில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

மண்டபம்

நாம் மண்டபம் என்ற ஊரில் இந்த மகத்தான பொதுக்கூட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். சில கட்சிகள் மண்டபங்களிலே தங்களது பொதுக் கூட்டங்களை – மாநாடுகளை நடத்தி வருகிறார்கள்.

நாம் மண்டபம் என்ற ஊரையே மைதானமாக்கி பொதுக்கூட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம் இதுதான் தி. மு. கழகம் பெற்று வருகின்றவளர்ச்சியைக் காட்டும் அடையாளம் ஆகும்.

ஒரு காங்கிரசை சேர்ந்த மத்திய அமைச்சர், 'இந்தப் பணம் எப்படி வருகிறது?' என வியக்கிறார். அந்த அமைச்சர் செட்டி நாட்டை சேர்ந்தவர். சீமான் வீட்டுப் பிள்ளை! சின்னப்பிள்ளையும் கூட!

அவரது வாயை மூடியிருக்கும்படி பிரதமர் ராஜீவ் உத்தரவிட்டால், வருகிற சட்டசபை தேர்தலில் காங்கிரசுக்கு டெபாசிட்டாவது கிடைக்கும். அடக்கி வைக்கத் தவறினால் டெபாசிட்டை அடைய முடியாது.

இப்படி கருணாநிதி சொன்னார். (எ–4)

அதிபர் ஆசிரியர்கள் வேலை நீக்கம்

கொழும்பு, ஜூலை 5

திக்கவல்லையில் 15 வயது மாணவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த மாணவன் படித்து வந்த விஜிதா மகா வித்தியாலயத்தின் அதிபரும் நான்கு ஆசிரியர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்றுஅறிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் அதிபர், சம்பளம் எடுக்கச்சென்று இருந்தார் என்றும் மாணவரின் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க ஆசிரியர்கள் முயற்சிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

[இ–எ]

'நான் சாதாரண பெண் அல்ல' -ஜானகி

வேலூர் ஜூலை 4

வேலூர் கூட்டத்தில் ஜெயலலிதாவுக்கு ஜானகி சுடும் எச்சரிக்கை விடுத்தார். 'நான் சாதாரண பெண்ணல்ல எம் ஜி–ஆரின் மனைவி' என்று அவர் பேசினார்,

ஜானகி

அ. தி. மு. க தலைவர் ஜானகிவடவார்காட்டில் சுற்றுப்பயணம்செய்தார். போரூரில் நடந்த கூட்டத்தில் ஜானகி பேசியதாவது;–

நான் மக்களை பூரணமாக நம்புகிறேன். அவர்களும் என்னை நம்புகிறார்கள்.

விடமாட்டேன்

எம். ஜி. ஆர். அரும்பாடு பட்டு வளர்த்த கட்சியை நான் விடமாட்டேன். யார் உடைக்க முயற்சி செய்தாலும் விடமாட்டேன். அதற்கான ஆற்றல் உறுதியை அவர்கொடுத்துள்ளார்.

எனது கடைசி மூச்சு உள்ளவரை உங்களுக்காக உழைப்பேன்.

சொத்து

எம். ஜி ஆரை விட விலைமதிக்க முடியாத சொத்து எனக்கு வேறு இல்லை. அவரே போன பிறகு எனக்கு யார் இருக்கிறார்கள்? நீங்கள் தான் என் சொத்து. அவரது புகழை நிலை நிறுத்த உங்கள் ஆதரவைக்கேட்கிறேன்.

என்னை திட்டுவதால் சிலருக்கு புகழ் கிடைத்தால் எனக்கு மகிழ்ச்சி தான்.

ஒருவர் பேசியது மறந்துவிடலாம். ஆனால் யார் என்ன செய்தார் என்பது மறக்கலாகாது. அந்த வகையில் ஏழைகளுக்காக எம். ஜி. ஆர் செய்ததையாரும் மறக்க முடியாது. அவரை விதி நம்மிடம் இருந்து பறித்து சென்றுவிட்டது

அதற்காக மூலையில் இருந்து அழ நான் சாதரண ஜானகி அல்ல. எம். ஜி, ஆரின் மனைவி ஜானகி!

இவ்வாறு ஜானகி பேசினார். (எ –4)

திருமந்திர விளக்கவுரை; இவ்வாரமும் தொடரும்

யாழ்ப்பாணம், ஜூலை5

திருமந்திரச் செம்மல் திரு. எஸ். இராமநாதன் நிகழ்த்திவரும்திருமந்திர விளக்கவுரை இவ்வாரமும் தொடர்ந்து இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கந்தர் மடத்தில் உள்ள தெய்வீகத் திருக்குறள் இளைஞர்மன்றத்தின்ஆதரவில் திரு. இராமநாதன் பாடசாலைகள், சைவாலயங்களில் திருமந்திரவிளக்கவுரைகளை தற்சமயம் நிகழ்த்தி வருகிறார்.

சைவாபிமானிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே விரிவுரைகள் தொடர்ந்து இடம் பெறும் என்று மன்றத் தலைவர் திரு. எ. என். யோகநாதன் அறிவிக்கின்றார். (இ–எ)

கந்தரோடையில் கோமாரி தடுப்பு ஊசி

மானிப்பாய், ஜூலை 5

கோமாரி நோய்க்கான தடுப்பூசி இம்மாதம் நாளைபுதன்கிழமை மாலை 4–30 மணிக்கு கந்தரோடை சுப்பிரமணிய வாசிகசாலையில் வைத்துப் போடப்படும்.

80 மாடுகள் சேராவிட்டால் தடுப்பூசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படமாட்டாது என்று தெல்லிப்பளை அரசாங்க கால்நடை வைத்தியர் டாக்டர் திருமதி சுமன தேவி தனபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

(இ–90)

முல்லைத்தீவில் இருவர் கைது!

புதுக்குடியிருப்பு, ஜூலை 5

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் ஆகிய கிராமங்களில் வைத்து இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது படையினரால் ஒரு வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

மற்றும் ஒருவர் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டார்.

(இ–126)

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் அவசியம்

வைத்திய அதிகாரி வலியுறுத்து

மலேரியா, மூளைக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற பயங்கர நோய்களுடன் போராடிக் கொண்டிருக்கும் புதுக்குடியிருப்பு மக்களைக் காப்பாற்றுவதற்கு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சேவை அவசியமாகும்.

இவ்வாறு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திரு. யோகேஸ்வரதேவன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இரணைப்பாலை, மாத்தளன், முள்ளிவாய்க்கால், தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார் கட்டு, விஸ்வமடு, முத்தையன் கட்டு ஆகிய கிராமங்களை புதுக்குடியிருப்பு உள்ளடக்கியுள்ளது.

ஆனால் இப்பிரதேச வைத்தியசாலைக்கென ஒரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் இல்லாதது பெரும் குறைபாடாக உள்ளது என்றார். [சி-94]

719 பாடசாலைகளைப் புனரமைக்க

ஆசிய அபிவிருத்தி வங்கி ரூ. 50 கோடி வழங்கியது

கொழும்பு, ஜூலை 5

16 மாவட்டங்களில் 719 பாடசாலைகளை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 50 கோடி ரூபாவை அரசுக்கு வழங்கி உள்ளது.

சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்தவும் விஞ்ஞான உபகரணங்களை வழங்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளைப் புனரமைக்க நோராட், றெட்பார்ணா நிறுவனங்களும் 3 கோடி ரூபாவை வழங்கியுள்ளன. (எ)

வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 5500 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்வி கோரப்படுகின்றன.

ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூ. 500/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்" எனக்குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். சாக்குகளை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி :
15 - 07 - 88

பொது முகாமையாளர்,
புலோலி பல நோ. கூ. சங்கம்.

(5160)

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]
பிரிவு 4

O/L
DAY CLASSES [8. 30 – 1. 30]
EVENING CLASSES [2. 45 – 4. 45]
MORNING CLASSES [6. 15 - 7. 45]

ஆண்டு 10, 9, 8, 7. 6, ம் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
[காலை 6. 15 – 7. 45, மாலை 2. 45 – 4. 45]
புதிய வகுப்பு ஆரம்பம்: 13. 7. 1988

மு. குறிப்பு:– I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.
II. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
III. மாணவர்கள் தரம் அறிந்து வகுப்புக்கள் பிரித்து நடாத்தப்படும்.
IV. G. C. E. [O/L] பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்பட்டதுதெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்படும்.

(C5609)

Asanga Enterprises
A. வாசன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
வடபகுதி மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

மலேசியா

கோழிப்பண்ணை வேலையாட்கள்	40	400	வெள்ளி
சமையற்காரர்	3	500	வெள்ளி
உதவிச் சமையற்காரர்	5	400	வெள்ளி

5 வருட ஒப்பந்தம், உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசம்.

28-7-88க்கு முன் பிரயாணத்தை மேற்கோள்ளலாம்.

செல்ல விரும்புவோர் எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் பாதுகாப்பான, நிச்சயமான பிரயாண ஒழுங்குகள்

கனடா

குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கோள்ளலாம்.

புறுணை

கிளீனேர்ஸ் 15 பேர் US டொலர் 200

40 நாட்களுக்குள் பயணம் செய்ய முடியுமானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

- சவூதி, குவைற்றுக்கான வெற்றிடம் எம்மிடம் உண்டு. செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

அசங்கா என்ரபிறைஸர்ஸ்

இல. 32, 5ஆம் குறுக்குத்தெரு,
(பிலிப்ஸ் நேகிங்ஹோமுக்கு எதிரே)
யாழ்ப்பாணம்.

(சி-5657)

அமெரிக்கத் தீவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

மேசன்மார் (Masons)
தச்சுத் தொழிலாளர் (Carpentors)
கட்டிட இரும்பு வளைப்போர் (Bar Benders)
தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:–

எஸ். குலம்
பெரிய பளை,
பளை.

(5159)

ஓராண்டு நினைவஞ்சலி

வல்லிபுரம் - வசந்தன்
(துன்னாலை)
கப்டன் மில்லர்

தாயின் மடியில் ஜனனம்:
01 – 01 - 1966

தாய் நாட்டின் விடிவிற்காய் வீரமரணம்:
05 - 07 - 1987

"நான் மரணத்தை மகிழ்ச்சியுடன் தழுவிக் கொள்கிறேன். ஏனெனில் எமதுமக்கள் விடுதலையடைவார்கள் என்பதற்காக" —மில்லர்.

26–05–87 | அன்று சிங்களப் பேரினவாத அரசினால் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பாரிய "ஒபரேசன் லிபரேசன்" தாக்குதலைத் தொடர்ந்து சிங்கள அரசை நிலைகுலையச் செய்து இந்தியாவிடம் சரணாகதியடையச் செய்த வீரமறவன் மில்லரை இழந்து இன்று ஒரு வருடம் நிறைவு பெற்றதை நினைவு கூருகிறோம்.

மில்லா! நீ வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். நீ வாழத்தெரியாதவன் அல்ல. வாழ்வின் சுக போகங்களை விட எம் மண்ணின் அவலங்கள்தான் உன்னை இவ்வளவு தூரம் எம்மிடையே உயர்வடையச்செய்தது. சிறந்த சாரதியாக விளங்கிய நீ எந்தவொரு இராணுவத்தாக்குதலிலும் பின் நிற்பதில்லை. குறிப்பாக வடமராட்சித் தாக்குதலில் உனது வீரம் நன்கு சுடர்விட்டது. இறுதிப்போருக்குரிய தாக்குதலாக அது நடந்ததனால் நீ நேசித்த வடமராட்சி சிங்களப் படையினரின் கையிற்குள் அகப்பட்டது. எவ்வாறாயினும் அந்த மண்ணை மீட்க வேண்டும் என்பதில் உனக்கிருந்த துடிப்பு உன்னுடன் இருந்த சக நண்பர்களுக்கு நன்கு தெரியும். மண்ணை இழந்த வேதனை உன்னை தியாகத்தின் எந்தக் கட்டத்திற்கும் செல்லலாம் என்ற உணர்வை ஊட்டியது. உனக்கு அந்தத் திறமை இருந்ததால் உனக்கே அந்தச் சந்தர்ப்பமும் கிடைத்தது. தமிழீழவிடுதலைப் புலிகளின் முதல் கரும்புலியாக நீ உருமாறினாய். அத் தாக்குதலுக்கான முழு வேலைகளையும் நீயே பொறுப்பேற்றாய். நீ மரணிக்கப்போகும் நேரம் குறிக்கப்பட்ட போதிலும் நீ அதற்கு சிறிதும் அஞ்சவோ கலங்கவோ இல்லை. வழமையிலும் விட உற்சாகமாக உனது செயற்பாடுகளில் இறங்கினாய். குறிக்கப்பட்டநேரத்தில்உனது தாக்குதல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. உடல் சிதறி எலும்போ சதையோ கிடைக்கவில்லை.

உயிர்த் துடிப்புள்ள ஒவ்வொரு தமிழ் நெஞ்சங்களிலும் நீ நிறைந்திருக்கின்றாய். உன்னை இழந்த இந்த ஒரு வருட காலத்திற்குள் நீ நேசித்த இம்மக்கள் பல்வேறு வழிகளிலும் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகின்றனர். இரத்தமும் கண்ணீரும் படிந்த உனது மக்களின் சோக வரலாறு முடிவின்றி விடிவில்லா நீண்ட பயணமாகத் தொடர்கின்றது. நீ நேசித்த மக்கள் நெருப்பின் மத்தியில் துவண்டு வாழ்கின்றனர். உனது உயிர்த் தியாகம் வீண் போகாது. உனது நம்பிக்கை நிறைவேறும், இது உறுதி.

– அரியாலை நண்பர்கள்.

(5173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவில் பிரஜாவுரிமை அற்ற

இந்திய வம்சாவழியினருக்கு காணி வழங்க நடவடிக்கை

ஒட்டுசுட்டான், ஜூலை 5
முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் பிரஜாவுரிமையற்ற இந்திய வம்சாவழியினருக்குக் காணி வழங்கப்படவுள்ளது.

கடந்தகாலவன்செயல்களினால் மலையகத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்து சஞ்சம் அடைந்தவர்கள் இவர்கள்.

இவர்களுக்கு குடும்பத்துக்கு இரண்டு ஏக்கர் வீதம் காணி வழங்கப்படவுள்ளது.

இக்காணி விசேஷ வருடாந்த அனுமதிப் பத்திர அடிப்படையில் வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு: க. பொன்னம்பலம் காணி அமைச்சுடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். (இ-113)

கொம்பியூட்டர் அறிமுக நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5
கொம்பியூட்டர் அறிமுக நிகழ்ச்சித் திட்ட பயிற்சி நெறிக்கானவிண்ணப்பப்படிவங்கள் நாளை 6 ஆம் திதி தொடக்கம் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழக அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல்3.00மணி வரை வழங்கப்படும். (க)

பன்றிகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து

கொழும்பு, ஜூலை.5
நாட்டில் வளர்க்கப்படும் சுமார் 80 ஆயிரம் பன்றிகளுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

கல்விக் கடமைகளை சேவை மனப்பான்மையுடன் நடத்துவதாகப் பாராட்டு

பலாலி, ஜூலை 5
கல்வித் திணைக்களம் வற்புறுத்துவதற்காக மட்டும் பாடசாலைகளில் துணைக் கல்விக் கடமைகளை நடத்தாது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக அவைகளைத் தொடர்ந்தும் நடத்தி வரும் சில பாடசாலைகளில் யாழ். கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் முன்னணியில் நிற்பதனை நான் பாராட்டுகின்றேன்.

கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப்பளை வலய தலைமைப் பாடசாலை அதிபரும், யூகியன் கல்லூரி அதிபருமான திரு. ஸ்ரீ புஸ்பநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ''எமது வலயத்தினுள் பல சிக்கல்களின் மத்தியில் முதன்முதலாக விளையாட்டுவிழாவை நடத்தி முடித்தும்— ஆங்கில தின விழாவை நடத்தியும் தமிழ்த்தின, சமய வார விழாக்களை நடத்தத்திட்டமிட்டும் செயற்பட்டுவரும் வித்தியாலய அதிபரையும், குறிப்பிட்ட துறைகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் நான் பாராட்டுகின்றேன் என்றார். (இ-119)

சைவ மாணவர் விடுதி

கிளிநொச்சி, ஜூலை 5
இலங்கை காந்தி சேவா சங்கம் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்த சிறுவர்களுக்கான அநாதைகள் சைவ மாணவர் விடுதி ஒன்றை நடத்தத் திட்டமிட்டு அதன் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சைவமாணவர் விடுதியின் ஆண்கள் பிரிவு உருத்திரபுரம் காந்தி சேவா சங்கத்திலும் பெண்கள் பிரிவு தருமபுரத்தில் உள்ள ஸ்தூரிபாய் இல்லத்திலும் அமையும்.

இந்த இரு விடுதிகளையும் உடன் ஆரம்பிக்க சுமார் 12 லட்சம் ரூபா ஆரம்பவேலைகளுக்கு செலவிடப்படவுள்ளது, (சி-76)

கைதானவர்கள் விடுதலை

திருகோணமலை, ஜூலை 5
கடந்த வாரத்தில் தொடர்ந்து ஐந்து நாட்களில் இந்திய அமைதிப் படையினரால் நிலா வெளி, சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, குச்சவெளி, கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து

(7ஆம் பக்கம் பார்க்க)

வீடுகள் புனர்நிர்மாணம் விண்ணப்பம் பரிசீலனை

யாழ்ப்பாணம் ஜூலை 5
தமது வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு புனர்வாழ்வு நிதியத்திடம் நிதி உதவி கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றனர்.

உடுபுடைவைகள் சமையல் பாத்திரங்கள் என்பனவற்றை இழந்தவர்களுக்கே இந்த நிவாரணக் கொடுப்பனவில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளது.

மேலும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள் அவரவருக்கு திருப்பி அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-9)

தவக்காலத்தையொட்டி நடந்த

கட்டுரை, சுவரொட்டி போட்டி முடிவுகள்

குருநகர், ஜூலை 5
அகில இலங்கை சத்தோலிக்க நீதி, சமாதான, அபிவிருத்தி ஆணைக்குழு 1988 ஆம் ஆண்டு தவக்காலத்தை ஒட்டி அகில இலங்கை ரீதியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் நடத்திய கட்டுரை, சுவரொட்டிப்போட்டிகளின் முடிவுகள் இவ்வாரம் வெளியிடப்பட்டுள்ளன.

இரு போட்டிகளும் நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

மேற்படிபோட்டிகளில் ஒவ்வொரு பிரிவுக்கும் பத்துப்பேர் என்னும் விதத்தில் மொத்தம் நாற்பதுபேர் பரிசு பெறுகிறார்கள்.

இந்த நாற்பது பேரில் பன்னிரண்டு பேர் குடாநாட்டுக்கு ஊடாகப் பரிசு பெறுபவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விபரங்கள் பின்வருமாறு:

சுவரொட்டிப்போட்டி
வயது 12–20 வரை:–
அ. கிறிண்டி நிமால்கி சென்மேரிஸ் றோ. க. தமிழ் பாடசாலை, ஊர்காவற்றுறை.

12, வயதுக்கு உட்பட்டவர் பிரிவில்:
எஸ். சந்திரமோகன் சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம், ஜெலான் அருணு, சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கட்டுரைப் போட்டி:–
12–20, வயது.
அ. நிர்மலா குமாரி இளவாலை கன்னியர் மடம், எஸ். கே. ஜெயபாஸ்கரதாஸ் 'புனிதபவனம்' புதுக்குடியிருப்பு ஜே. அன்ரனியூட் யாழ். மத்திய கல்லூரி, அ. பாத்திமாராணி, இளவாலை கன்னியர் மடம், ம. மௌன் நியூட்டன் சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம், எஸ். வசந்தகுமார் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

12, வயதுக்கு உட்பட்டவர் பிரிவில்.
எம். ஐவந்தாவதனி றோ. க. தமிழ்பாடசாலை ஊர்காவற்றுறை, ஏ. ஏ. யு. பாமிலாருரி தாளையடி றோ. க. பாடசாலை, சஸ்பிதா ஜெகநாதன் மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இவர்கள் யாழ்–மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தில் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய செஞ்சிலுவைச் சங்க டாக்டர் குழுவின் சேவைக்குப் பாராட்டு

திருகோணமலை, ஜூலை 5
இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் குழுவொன்று பல மாதங்களாக திருகோணமலையில் தங்கியிருந்து பொதுமக்களுக்குப் பல மருத்துவப் பணிகளைச் சிறப்பாச் செய்து வருகின்றது.

திருமலையிலுள்ள டாக்டர் குழுவுக்குத் தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் எஸ்.என். பாஸ்கரன் தலைமைவகிக்கிறார்.

அவருக்கு உதவியாக திரு. நிரஞ்சன்குமார், வி. சிவலிங்கம், சி.இராஜேந்திரம் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

இந்தக்குழு திருமலை நகரிலும் மற்றும் மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களிலும் மருத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மூதூர்ப் பகுதியில் வாந்திபேதி நோய் பரவுவதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து சென்றவிழமை அங்கு சென்று பல நோயாளர்களைப் பரிசோதித்து மருத்துவ சிகிச்சைகளை இக்குழு மேற்கொண்டது.

பின்தங்கிய கிராமங்களான திரியாய், புல்மோட்டை, புடைவைக்கட்டு போன்ற பல கிராமங்களுக்கும் சென்று இந்தக் குழுவினர் பல நோயாளிகளுக்கு மருத்துவசிகிச்சை அளித்து வருகின்றனர்.

அபயபுர, மிஹிந்தபுர போன்ற சிங்களப் பகுதிகளுக்கும் நகரிலுள்ள சிங்கள அகதிகள் முகாமுக்கும் வாரத்தில் ஒருநாள் சென்று மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றனர்.

மருத்துவ சிகிச்சை தவிர இந்தக் குழுவினர் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுகளான அரிசி, சீனி, பால்மா போன்றவற்றையும் வழங்கிவருகின்றனர்.

அண்மையில் இந்தக் குழுவினர் கன்னியாவுக்குச்சென்று அங்குள்ள மக்களுக்கு அரிசி, சீனி, பால்உணவு. பருப்பு போன்ற பொருள்களையும் வழங்கியுள்ளனர். (இ-150)

வலிவடக்கு உ. அரச அதிபர்

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபராக திரு. வை. இராசையா புதிதாக நியமனம் பெற்று பதவி ஏற்றுள்ளார்.

பதவி ஏற்பு வைபவத்தில் மங்கள வாத்திய சகிதம் உதவி அரச அதிபர் அழைத்துச் செல்லப்பட்டு மாலைகள் அணிந்து வரவேற்பு அளிக்கப்பட்டது. (இ-68)

Pfizer

அறிவித்தல்

பிகோஸுல்ஸ் காப்ஸுல்ஸ் மருந்துக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றது. பை(f)ஸர் (Pfizer) பிகோஸுல்ஸ் சறுப்பு ஒரேஞ்சு நிறங்களில் ஒவ்வொரு நிறத்தின் மீதும் Pfizer என்ற சொல் காணப்படுகின்றது.

பிகோஸுல்ஸ் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பகமான தயாரிப்பு. ஆதலால் அதற்குப் பதிலாக அதேபோல் வேறு ஒரு போலித் தயாரிப்பை அறிமுகப்படுத்த முயற்சிக்கப்படலாம். ஆகவே டாக்டர் எழுதிய தயாரிப்பைத்தான் மருந்துக் கடையில் தந்தார்களா என்பதை டாக்டர் தந்த சீட்டுடன் ஒத்துப்பார்க்கும்படி நாம் ஆலோசனை கூறுகிறோம்.

பை(f)ஸர் (Pfizer) பிகோஸுல்ஸ் கப்ஸுல்ஸ் இப்படித்தான் காணப்படுகிறது

கறுப்பு ஒரேஞ்சு

பிகோஸுல்ஸ் காப்ஸுல்ஸ் தயாரித்து விநியோகிக்கும் பை(f)ஸர் நிறுவனம் அதன் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

பை(f)ஸர் லிமிட்டெட்
688, காலி வீதி, இரத்மலானை.

ANNOUNCEMENT

Becosules Capsules are now freely available with the Chemist. Pfizer Becosules are black and orange in colour and have the word Pfizer on each half of the capsule.

Since Becosules is a well accepted and reliable product, substitution with a similar looking preparation may be attempted. We suggest that you check your Doctor's prescription with the Chemist, in order to ensure that you are dispensed the product that has been prescribed.

"Pfizer" Becosules Capsules will look like the above".

Becosules Capsules are manufactured and distributed by Pfizer, who guarantee its quality.

Pfizer Limited
688, Galle Road, Ratmalana.

(C4946)

THE HALLMARK OF TRUST AND RELIABILITY



Over the years Shabra Unico Finance Limited have extended their hand of friendship to stand with you and assist you to prosper in business.
This hallmark of dependability and reliability have enabled numerous individuals, partnerships and company organization to blossom out into success as we have stepped into provide various forms of financial assistance.

Our offer of comprehensive financial services comprise the following.
- HIRE PURCHASE FINANCE AND LEASING OF COMMERCIAL AND INDUSTRIAL VEHICLES.
- IMPORT AND TRADE LOANS
- SHORT-TERM WORKING CAPITAL FOR VARIOUS COMMERCIAL AND INDUSTRIAL NEEDS AND CONSTRUCTION ACTIVITY.
- PLEDGE LOANS AND GUARANTEE FACILITIES.

Besides, qualified money managers of high calibre in the field of banking and finance have always been there to share their experience through friendly discussions.

WE HAVE YOUR INTERESTS AT HEART.

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
UNICO FINANCE LTD.
61, New Bullers Road, Colombo 4
Telephone: 689310, 500576
SGC TEAM SUF 03

கொம்பியூட்டர் பயிற்சி

யாழ்நகரிலும்!	நெல்லியடி கிளையிலும்!	தெல்லிப்பளை கிளையிலும்!
9. 07. 88 (Sat)	6. 07. 88 (Wed)	6.07.88(Wed)
(9. 30am)	(9. 30am)	(4. 00pm)

Diploma in Computer Programming Course இற்கான சிறப்புப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- Basic Programming 1½ மாதம் Rs 400/–
- Advanced Basic 1 மாதம் Rs 500/–
  (ஏற்கனவே வேறிடங்களில் Basic படித்தவர்களுக்கு மட்டும்)
- Cobol Programming 2 மாதம் Rs 500/–

செய்முறைப் பயிற்சி IBM-PC SUPER / XT உட்பட பல Computer களில் அளிக்கப்பட்டு, IDP பரீட்சை முடிவில் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உடனடி வேலைவாய்ப்புக்களைப் பெறும் வகையில் தரமான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

IDP
INSTITUTE OF DATA PROCESSING

342, K. K. S. Road. (பிள்ளை கோவிலடி) யாழ்ப்பாணம்.
Modern Centre (அருகில்) நெல்லியடி.
K. K. S Road, (துர்க்கையம்மன் கோவிலடி) தெல்லிப்பளை.

(சி-5628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர் குடியேற

பொருத்தமானகாணி கண்டு பிடிப்பதில் அதிகாரிகள் தீவிரம்

திருகோணமலை, ஜூலை 5

திருகோணமலையிலுள்ள தமிழ் கோவில்களுக்குச் சொந்தமான காணிகளிலும் கோவில்களை அண்டியுள்ள பகுதிகளிலும் குடியிருந்த சிங்கள மக்கள் அனைவரும் சென்ற அக்டோபர் மாதம் இடம் பெயர்ந்திருந்தனர்.

அவர்களின் வீடு வாசல்கள் யாவும் முற்றாக அடித்து நொருக்கப்பட்டன. அவ்வாறு இடம் பெயர்ந்த சிங்கள மக்களை மீண்டும் திருமலையிலேயே குடியமர்த்தி பொருத்தமான இடங்கள் தேடப்படுகின்றன. பொருத்தமான காணிகள் கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் குடியமர்த்தப்படுவார்களாம்.

திருமலை இணைப்பதிகாரி பிரிகேடியர். கொப்பே கடுவ அண்மையில் கோவில் தர்மகர்த்தாக்களை அழைத்து கலந்துரையாடினார்.

கோவிலுக்குச் சொந்தமான காணிகளிலோ, கோவிலை அண்டியுள்ள பகுதிகளிலோ இடம் பெயர்ந்தவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்கு கோவில் நிர்வாகஸ்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே இவர்களுக்கு பொருத்தமான காணிகளைத் தேடிவருகின்றனர்.

நகரப் பகுதியில் இவ்வாறு குடியமர்த்துவதற்கு பொருத்தமான காணி உண்டா, இல்லையா என்பன பற்றிய விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு நகரின் உதவி அரசாங்க அதிபரை அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ-150)

யாழ்.மாவட்டத்தில்

வெங்காயச் செய்கை பெரும் அளவு பாதிப்பு

பலாலி, ஜூலை 5

யாழ் மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வெங்காயச் செய்கை கட்டுப்படுத்தமுடியாத புழுவினாலும், காயழுகி மஞ்சள் நிறமடைந்து பட்டுவிடும் ஒருவகை நோயினாலும் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்ற சில குறிப்பிட்ட பூச்சிகொல்லி மருந்துவகைகளுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, மூன்று நான்கு மடங்கு விலை ஏற்றமும் உள்ளது.

டீசிஸ், "பேத்திரேருயிட்' போன்ற மருந்து வகைகளை விசிறியபோதும் தண்டுக்குள் பாதுகாப்பாக இருக்கும் புளுக்களை அழிப்பதில் பல விவசாயிகள் தோல்வி கண்டுள்ளனர்.

காலையிலும், மாலையிலும் வேறு மந்தார வேளைகளிலும் தண்டிலிருந்து வெளிவரும் புழுவைத் தொடர்ச்சியான பூச்சிக்கொல்லி மருந்துகளை விசிறியும்-"பேருசில்" போன்ற மருந்துக் கலவையை விசிறியும் அழிப்பதில் கவனம் செலுத்தினால் மட்டுமே இப்புழுவைக் கட்டுப்படுத்த முடியுமென்று ஒரு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் தெரிவித்தார். [இ-119]

முல்லைத்தீவில் தமிழ்ப்பிரதேசங்கள் தொடர்ந்து பறிபோகின்றன

தமிழர் முன்னேற்றமன்றம் கவலை

புதுக்குடியிருப்பு ஜூலை 5

முல்லைத்தீவில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தால் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் தொடர்ந்து பறிபோகின்றன.

இவ்வாறு வன்னிப்பிரதேச தமிழர் முன்னேற்ற மன்றத் தலைவர் திரு. இ. ஜெயப்பிரகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஒரு மாவட்ட அரசாங்க அதிபருக்குத் தெரியாமல் அம்மாவட்டத்தில் காணிக்குடியேற்றம் நடைபெற முடியாது. எல்லை நிர்ணய சபையின் சிபார்சு இன்றி மாவட்ட எல்லைகளைப் பிரிக்கமுடியாது.

ஆனால் தமிழர்கள் பாரம்பரியமாக வாழுகின்ற முல்லைத்தீவு பிரதேசத்தில் மட்டும் இது செயற்படுத்தப்பட்டு வருவது ஆச்சரியமாக உள்ளது.

மணல் ஆறு, சூரியன் ஆறு என்பன முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உள்ள பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களாகும்.

இக்கிராமங்களில் இன்று வெலிஓயா குடியேற்றத் திட்டம் என்ற பெயரில் சிங்களமக்கள் பாரிய அளவில் குடியேற்றப்படுகின்றனர்.

இப்பகுதிகளில் திட்டமிட்டுக் குடியேற்றப்படும் சிங்கள மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் சர்வோதயம், இலங்கை பௌத்த காங்கிரஸ் புனர்வாழ்வு அமைச்சு என்பன பெருமளவிலான தம்மாலியன்ற உதவிகளை வழங்கிவருகின்றன.

இதுபற்றி முல்லைத்தீவுப் பகுதித் தமிழ் மக்களது பிரதிநிதிகள் இந்திய அமைதிப்படைக்கும் இந்திய அரசுக்கும்நன்கு தெரியப்படுத்தியும் இதுவரை வெலிஓயா குடியேற்றத் திட்டம் நிறுத்தப்படவில்லை

இவ்வாறு வன்னிப் பிரதேச முன்னேற்ற மன்றத் தலைவர் கூறினார். [இ-126]

யாழ். மத்திய கல்லூரி திருத்த வேலைகளுக்கு ரூ 6 லட்சம் ரேட்பானா வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ் மத்திய கல்லூரி உடனடித் திருத்த வேலைக்கு 6 இலட்சம் ரூபா வழங்க 'ரெட்பானா' முன்வந்துள்ளது.

ரெட்பானா இணைப்பு அதிகாரி திரு. எஸ். சோதிராஜா யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்ற ராணுவநடவடிக்கைகளினால் யாழ் மத்திய கல்லூரி பலத்த சேதத்துக்குள்ளாயது.

இதனை மறுசீரமைக்க உதவும்படி அதிபர் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ரெட்பானா இணைப்பு அதிகாரி யாழ் மத்திய கல்லூரியின் அவசரத் திருத்த வேலைகளுக்கு 6 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் அரசாங்க அதிபருடனும், கல்விப் பணிப்பாளருடனும் தொடர்பு கொண்டு இத்தொகையை யாழ் மத்திய கல்லூரிக்கு கிடைக்க வசதி செய்வதாகவும் தெரிவித்தார். (இ-5)

மக்கள் முகம்

இயக்கச்சி அரசினர் பாடசாலை அபிவிருத்திச் சபை

கொடிகாமம் ஜூலை 5

இயக்கச்சி அரசினர் பாடசாலை அபிவிருத்திச் சபை வருடாந்தக் கூட்டம் அதிபர் திரு. பொன் - தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. பளை கொத்தணி அதிபர் திரு அ. பொ. செல்லையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

[illegible] பாடசாலை அதிபரும் பொதுச்செயலாளராக ஆசிரியர் திரு எஸ். ஆர். வாமசிவனும் தெரிவாகினர்.

18 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ75)

நந்தியின் மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

பேராசிரியர் 'நந்தி' யின் மணிவிழா எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

நல்லூரில் உள்ள யாழ் மாநகரசபை அலுவலகத்தில் பிற்பகல் 2-30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

"தினகரன்" பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் திரு. தி. ச, வரதராசன் (வரதர்) பேராசிரியர் 'நந்தி'க்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், திரு. சொக்கன், திரு. டொமினிக் ஜீவா, திரு. இ. முருகையன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

மணிவிழா மலர் வெளியீட்டுரையை பேராசிரியர் கா, சிவத்தம்பி நிகழ்த்த, மலர்ப்பொறுப்பாசிரியர் திரு. நா. சோமகாந்தன் சமர்ப்பணவுரை நிகழ்த்துவார் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நயவுரை ஆற்றுவார்.

மற்றும் பலர் வாழ்த்துரைகள் வழங்குவர். (ஒ-க)

"கௌலண்ட்" இல்லம் முதலிடம் பெற்றது

யாழ்ப்பாணம் ஜூலை 5

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிவருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் "கௌலண்ட்" இல்லம் 211½ புள்ளிகளைப் பெற்றுமுதலாமிடத்தை தட்டிக் கொண்டது.

மேற்படி கல்லூரி மைதானத்தில் அதன் உப அதிபர் திருமதி வி. சிவபாக்கியநாதன் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

பண்டத்தரிப்பு கொத்தணி வலைய உப அதிபர் திரு. வி. நாகராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

'கிருபா' இல்லம் 171½ புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், "ஹில்லிஸ்" இல்லம் 127 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும், 117புள்ளிகளைப் பெற்று 'புஸோரு' இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (இ-க)

BECON கல்வி நிலையம்

கலை, வர்த்தகம்

A/L 89

(ஒரு வருட வகுப்பு)

பகல் நேர வகுப்புகள்

பொருளியல்;	வரதராஜன்
வர்த்தகம் ·	ரட்ணம்
கணக்கியல் :	மரியதாஸ்
அளவையியல் :	S. S. மனோகரன்
தமிழ் :	தாஸ்
இந்துநாகரீகம்	ஜோதிஸ்வரன்

ஆரம்பம்:- 6-7-1988

புதன் 7-00 a. m.

BECON

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 5586) (ஸ்ரீதர் சினிமா முன்பாக)

1ஆம் வருட நினைவஞ்சலி

கப்டன் மில்லர்

படைகொண்டு நீ சென்றாய் தடை தாண்டி நீ வென்றாய் - உன் முடிவைத் தெரிந்து கொண்டே விடிவிற்கு வழிகாட்டினாய் சென்று திரும்பா உன் கதையை துயருடன் கூறிய உன் தோழர் முகம் தெரியா அந்நியர் மூட்டிவிட்ட தீயினால் - உன் முகவரியைத் தேடித்தான் வந்தனரே.

மண் மீட்கும் போரினிலே மரணித்த தெய்வங்களே மண்டியிட்டோம் நாம் மாற்றான் காலடியில் - உம் தொண்டினை நாம் தொடர்ந்திடுவோம். பாசத்தை துறந்து தேசத்தை நேசித்தவனே பாடையிலே சுமக்கா உன் உடலை - எம் எல்லைக்கோடுகள் தாங்கி நிற்கும்.

உறுதி குலையா உன்மக்கள்
உரைத்திடும் வார்த்தை இதுவொன்றே
இழப்புகள் எம்மை உயிர்ப்பிக்கும்
இலட்சிய தாகம் தீரும் வரை

தமிழீழ மக்கள்

(5171)

45ஆம் நாள் நினைவஞ்சலி

கனக சுந்தரலிங்கம்
(எட்றிச், வெள்ளை)

தாயின் மடியில்: 06 - 10 - 1969
தாயக மண்ணில்: 22 - 05 - 1988

ஓ நண்பனே!
உன் தோழர்களின் கல்லறை வரிசையில்
உனது பெயரும் பொறிக்கப்பட்டு விட்டதா?
தன்னையே மறந்து தன்னூரிலே நின்று -உன்
தனித்துவத்தை இத்தரணி அறிய வைத்த
தன்மானத்தின் தவப் புதல்வனே - நீ
உதிர்ந்துபோன மலரல்ல,
உறுதியான உதய சூரியன் நண்பா
நீ தந்த அரிச்சுவடியில் உன் இரத்தத்தால் பொறித்துச் சென்ற உன் இறுதிக் கனவுகளே எம்முள் வாழும் நினைவுகள்.

உடுவில். நண்பர்கள்

(5165)

2-ஆவது ஆண்டு நினைவஞ்சலி

திரு க. கப்பித்தான் சபாபதி

தோற்றம் 20. 07. 1949
மறைவு 26. 7. 1986

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை வாழவைத்தீர். காலையிலே வேலைக்குப் புறப்பட்டீர். மாலையிலே தேடலை நாம் விட்டீர் புரண்டு விழும் எங்கள் உள்ளம் அழுது மனம் ஆறவில்லை. அதை எழுதிடமுடியவில்லை. வாழவைத்தீர் கோபுரமாய் ஆழப் பதித்தீர் அன்புதனை காலத்தில் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை ஞாலத்தின் அழியாக் கோலமதாய் எங்கும் புகழ் மணம் வீசி என்றென்றும் சுடர் விட்டெரியும்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பப்பா, அம்மா
மகன் - [illegible] மகள் - [illegible]

அளவெட்டி, தெற்கு. [illegible]

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

திருமதி மேரியம்மா இராமணி செல்வநாயகம்

அன்னையின் மடியில் 12- 07- 1912
ஆண்டவன் கரங்களில் 05- 06- 1988

இறைவா இறைவா என்று புலம்பிடும்
எங்கள் அன்பு அன்னையே!
இறுதியில் இறைவனின் கரங்களில்
சென்றடைந்தாயோ
எம்மை யெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்றாயோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், அயலவர்கள்.

"[illegible]" சூராவத்தை, சுன்னாகம்

(5167)

நெஞ்சம் நிறைந்த அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி இராசம்மா முத்துக்குமாரு
(இளைப்பாறிய ஆசிரியை தொண்டமானாறு மகா வித்தியாலயம்)

தோற்றம்; 5-1-1919
மறைவு: 8-5-1988

கெருடாவில் மறைந்த திரு-திருமதி இராசலிங்கத்தின் மகளும், மறைந்த திரு. நடராசா முத்துக்குமாரு B. A. J., P. (இளைப்பாறிய பிரதான கணக்காளர் இந்தியன் வங்கி) அவர்களின் மனைவியும் மறைந்த திரு. அன்னம்மா, செல்வரத்தினத்தின் தமக்கையும், திருமதி புஸ்பதேவி அழகரத்தினம், திரு. செல்லப்பாக்கியம் செல்லத்துரை ஆகியோரின் தமக்கையும், செல்வி இரஞ்சி செல்வரத்தினத்தின் பெரியதாயும் மறைந்த திரு. அ. செல்வரத்தினம் (காரைநகர்) திரு. செ. அழகரத்தினம் (இயக்குனர் கொழும்பு கொன்றாக்ரோஸ்) திரு. சு. செல்லத்துரை (இளைப்பாறிய அரசாங்க லிகிதர் குபேரபுரி மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனியும் ஆகிய இவரின் அந்தியேட்டி கிரியைகளும், வீட்டுக் கிருத்தியமும் கெருடாவில் திரு. செ, அழகரத்தினத்தின் இல்லத்தில் 06 - 07 - 88இல் அன்று புதன்கிழமை நடைபெறும். (சிதைவிற்கு தீமூட்டியவருக்கு ஆசூசம் காரணமாக இக்கிரியைகள் 31 ஆம் நாள் நடைபெற முடியவில்லை).

உறவினர், நண்பர்கள் அனைவரையும் இக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி அழகரத்தினம்,
திரு. திருமதி செல்லத்துரை.
(குபேரபுரி மானிப்பாய்)

கெருடாவில்,
தொண்டமானாறு.

(5773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

கொளப்பட்டேம் என்றெண்ணிக்
கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

பொருள்:

அசைவற்ற தெளிந்த அறிவினை உடையவர், 'யாம் அரசரால் விரும்பப்பட்டோம்' என்று எண்ணி அவர். விரும்பாதவற்றைச் செய்யமாட்டார்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22072
05-07-1988 த. பெ. இல. 22

பின்தங்கச் செய்யும் நோக்கம்

'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' -இப்படி ஒரு வாசகம். இந்த வாசகம் இந்தக் காலத்தில் அனேக விடயங்களுக்கும், மக்களில் அனேகருக்கும் பொருத்தமாகி வருகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தொலைபேசிச் சேவைக்கும் மேற்சொன்ன வாசகத்துக்கும் அதிக பொருத்தம் உண்டு.

யாழ்ப்பாணத்துக்கும் நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும் நேரடித் தொலைபேசி வசதி இருந்தகாலம் ஒன்று உண்டு. அப்போது கொழும்பு ஊடாக வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடனும் உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு இப்பகுதி மக்களுக்கு இருந்தது.

ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. யாழ்ப்பாண நகரத்திற்குள்ளேயே ஓர் அலுவலகத்தில் இருந்து மற்ற அலுவலகத்திற்கு நேரில் சென்றுதான் தொடர்பு கொள்ள வேண்டிய பரிதாபம்!

இந்திய அமைதிப்படையினரின் உள்ளூர் தொலைபேசி பொருத்தப்பட்ட சுமார் 300 ஸ்தாபனங்கள் மட்டும் தமக்குள் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், இந்த வருடம் ஜனவரிமாதம் தொடக்கம் யாழ்ப்பாண நகருக்குத் தொலைபேசி வசதி செய்யப்படுவது குறித்து அடிக்கடி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற நிலைதான்,

சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதா என்ற போக்கில் யாழ்ப்பாண நகரத்தில் உள்ள இரண்டொரு தபாலகங்களுக்கும், பத்துப்பதினைந்து அரச அலுவலகங்களுக்கும் கொழும்பு - யாழ் நேரடித் தொலைபேசி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இதனை, யானைப் பசிக்குச் சோளப்பொரி என்று தானும் சொல்லவும் ஒண்ணாது. யானைப் பசிக்கு இரண்டு எள்ளைக் கிள்ளிப் போட்டதாகத்தான் உவமானம் கூறலாம்.

எனினும் நூற்றுக்கணக்கான 'லைன்களைக்' கொண்ட 'மைக்ரோ வேவ்' தொலைபேசி அமைப்பு ஒன்றை இங்கு பொருத்துவது குறித்து தொலைத்தொடர்புத் திணைக்கள வட்டாரங்கள் பரிசிலனை செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் பரிசிலனை செயல்வடிவம் பெறுமா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்று! அதுவும் தற்காலிக ஏற்பாடாகவே அமையப் போகிறதா, நிரந்தரமாகவே இருக்குமா என்பது தெரியாது.

இந்த நாட்களில் எந்தநாட்டிலும், எந்தப் பகுதியிலும் தொலைத் தொடர்பு வசதி இல்லாவிடில் அந்த நாடு அல்லது பகுதி உலகம் தெரியாத கிணற்றுத் தவளையாகக் கிடந்து அபிவிருத்தியும் முன்னேற்றமும் இல்லாது பின்தங்க வேண்டியது தான்!

யாழ்ப்பாணத்துக்கும் இந்த நிலை ஏற்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு மனதிற்குள் எண்ணிக் கருமம் ஆற்றுவதைப் பிரதிபலிப்பதே, தொலைத் தொடர்பு வசதியை உண்டாக்குவதில் காட்டப்படும் தாமதமாகும்.

யாழ்ப்பாணத்தில் போர் நிலைமை தொடர்வதாகவும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு உரியசூழ்நிலை இல்லை என்றும் கூறி அந்தநிலை தொடர்வதற்குஏதுவான அரசியற் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா அரசு முடுக்கி வருவதும் அதனால் தான் போலும்!

இதுவரை மொத்தம் 12 புதிய பஸ்கள் வ. பி. போ. சபைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடபிராந்தியபோக்குவரத்துச் சபைக்கு இதுவரை 12 புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைக்கு 3 பஸ்களும், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி ஆகிய சாலைகளுக்கு தலா ஒரு பஸ்ஸும் வவுனியா சாலைக்கு 3 பஸ்களும், மன்னார் சாலைக்கு3பஸ்களும்வழங்கப்பட்டுள்ளன.

60 ஸ்ரீ தொடர் இலக்கத்தில் வழங்கப்பட்ட இந்த பஸ்கள் அனைத்தும் புதிதாக இந்தியாவிலிந்து தருவிக்கப்பட்டு கொழும்பில் உடற்கோப்புச்செய்யப் பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இதற்குமுந்திய காலப் பகுதியில் வடபகுதிக்கு விநியோகிக்கப்பட்டபஸ்கள் தென் பகுதியில் பாவிக்கப்பட்ட பின்பே இங்கு வழங்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

அமெரிக்காவைப்பழிவாங்கப் போவதாக

ஈரான் அரசு சபதம்!

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதன் எதிரொலி

வாஷிங்டன், ஜூலை 4

பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதிற்கு அமெரிக்காவைப் பழிவாங்கப் போவதாக ஈரான் அறிவித்தது.

290 பயணிகளுடன் சென்ற விமானத்தை அமெரிக்கப் போர்க் கப்பலே சுட்டு வீழ்த்தியது என்று அமெரிக்கா ஒப்புக்கொண்டது

சம்பவம் நடந்த 12 மணித்தியாலங்களின் பின்னர் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு இதுசம்பந்தமான அறிக்கையை விடுத்தது.

ஈரானின் சண்டை விமானம் என்று எண்ணி அதனை வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் போர்க்கப்பலொன்று சுட்டு வீழ்த்தியது என்று அதிபர் றேகன் தெரிவித்தார்.

மிகத் துக்ககரமான சம்பவம் இது என்றும் அவர் வருணித்தார்.

மிருகத்தனமான படுகொலை என்று ஈரான் இச்சம்பவத்தை வர்ணித்தது.

இத்தாக்குதல்குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு பூரண விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

விமானத்தில் பயணம் செய்த 290 பயணிகளும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்களில் 50 குழந்தைகள், ஏழு கைக்குழந்தைகள்என்றும்தெரிவிக்கப்பட்டது.

40 பேர் ஈரானிய தேசத்தவர் அல்லாதவர் என்றும் அவர்களில் 7பேர் இந்தியர் என்றும் மேலும் ஒருதகவல் தெரிவித்தது. (எ)

வெடி விபத்து

மாஸ்கோ அருகில் ஆயுத வெடி மருந்துக் குதம்ஒன்று வெடித்தது.

உயிர்ச்சேதம் ஏற்படவில்லைஎன்றும் உடைமைகள் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது.

161 சடலங்கள் மீட்பு!

வளைகுடாவில் சுட்டு விழ்த்தப்பட்ட ஈரான் விமானத்தில் இருந்த 290 பயணிகளில் இதுவரை 161 பேரின் சடலங்கள் மீட்சப்பட்டன என்று தெஹ்ரான் வானொலி தெரிவித்தது.

சீனாவில் நிலச்சரிவு; 47 பேர் பலி!

பீகிங், ஜூலை 4

சீனாவின் வடபகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவு, கடும்மழை காரணமாக 47 பேர் உயிரிழந்தனர். சுமார் 200 பேர் காயமடைந்தனர். பெருவெள்ளம் காரணமாக சுமார் 5 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். (எ)

வளைகுடா யுத்த முறையில் ஈரான் புதிய யுத்தி

தெஹ்ரான், ஜூலை.4

வளைகுடா யுத்தத்தை நடத்த புதிய உத்தி ஒன்றைக் கையாள ஈரான் தீர்மானித்து உள்ளது.

ஈரான் ஆயுதப்படைகளின் பதில் தளகர்த்தர் அலிராஜாபனி இதனை அறிவித்திருக்கிறார்.

அண்மைக் காலத்தில் ஈராக் படைகள் யுத்த முனைகளில் அடைந்த வெற்றிகளைத் தொடர்ந்து தான் ஈரானின் யுத்த உபாயத்தை மாற்றிக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார்.

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஈராக்கை ஆக்கிரமிப்பு நாடு என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை என்றும் அவர் சொன்னார். (எ)

'காங்கிரஸை ஒழித்தே தீருவேன்'!

காளிமுத்து சபதம்!!

திருவள்ளூர் ஜூலை ,4

'காங்கிரஸை ஒழித்துக் கட்டியே தீருவேன்என்று முன்னாள் அமைச்சர் காளிமுத்து கூறினார்.

பொதுக்கூட்டம்

திருவள்ளூர் அ. தி.மு.க. பொதுக் கூட்டம் நடந்தது. முன்னாள் எம். எல். ஏ. பட்டாபிராமன் தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் காளிமுத்து பேசும்போது கூறியதாவது:-

எம். ஜி. ஆர். இறந்தவுடன் பட்ட மனப்புண் தமிழக மக்களிடம் உள்ளது. ஆனால் அந்தப் புண்ணில் மிளகாய் பொடியைபோடுவதைபோல் கட்சியை பிளவுபடச் செய்து ஆட்சியையும் கலைத்து இருக்கிறது டெல்லி காங்கிரஸ்கட்சி

எம். ஜி. ஆர் இறந்தவுடன் ஜெயலலிதா "நிர்ப்பந்தம் நீங்கி விட்டது' நான் சுதந்திரப்பறவை" என்று அறிக்கை விட்டார். இது தான் ஜெயலலிதாவின் சுய உருவம்.

பேராசை பிடித்த காங்கிரஸ் காரர்கள்

வெளி உலகில்

கணவனை இழந்து துக்கத்தில் மூழ்கிய ஜானகி எம். ஜி. ஆர் ஆட்சியை அநியாயமாக கலைத்தார்கள். ஒன்றுபட்ட அ. தி. மு. வுககே ஆதரவு தருவோம் என்று சொல்லிய டெல்லி, 33 துரோகிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று சொல்லி அந்த 33பேர்களுக்கு மட்டும் ஆதரவு அனுதாபமும் காட்டுவது சரியா?

33 துரோகிகளோடு கூட்டணி அமைக்க பேரம் பேசுவது காங்கிரஸ்காரனின்ஒன்றுபட்ட கட்சிக்கு ஆதரவு என்னும் கொள்கைக்கு ஒத்ததா? ஏற்புடையதா? காங்கிரஸ்காரர்கள் இந்த கேள்விக்கு உடனே பதில்சொல்லட்டும்.

தேன் உண்ட வண்டு

திருவள்ளூரில் ஜெயலலிதாவின் பொய் பேச்சை கேட்டு வண்டுகள் எதிர்த்தனவாம். ராமாவரம் தோட்டத்தில் தேன் உண்ட நன்றியுள்ள வண்டு ஜெயலலிதாவை பேச விடாமல் 15நிமிடங்களுக்கு தடுத்ததாம். தமிழ்நாட்டில் உள்ள வண்டுகள், புழு பூச்சிகள் கூட ஜெயலலிதாவின் தராதரத்தை அறிந்து எதிர்க்கின்றன.

வெறிச்சோடிப் போயிருக்கும் எங்கள் அன்னை ஜானகி எம். ஜி. ஆரின் முகத்தை பாருங்கள், பத்துபைசா அளவுக்கு பொட்டு வைத்துள்ள ஜெயலலிதா நெற்றியை பாருங்கள். இதிலிருந்து ஜெயலலிதா உடன் கட்டை ஏறுவேன் என்று அறிவித்தது உலகை ஏமாற்றவே.

ஜெயலலிதா திமிர் வாதம் பேசுவதற்கு மூலகாரணம் டெல்லி காங்கிரஸ் கட்சிதான்

பூஸாவிலுள்ள யாழ் மாவட்ட

கைதிகளின் கவலை

(பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கைதிகள் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளனர். அரசியல் கைதிகள் சார்பாக யோ. ஞானப்பிரகாசம் என்ற கைதி எழுதிய கடிதத்தின் பிரதி உதயனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கடிதம் வருமாறு:

பூஸா முகாமில் பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வயோதிபர், குடும்பத்தர், இளைஞர்கள் ஆகிய எமது தற்போதைய நிலைபற்றி தங்களுக்கு இம் மகஜர் மூலம் அறியத் தருகிறோம்.

சேவை தொடர வேண்டும்

கடந்த பல மாதங்களாக யாழ் மாவட்டத்தில்ஏற்பட்ட துரதிஷ்டவசமான சில வேண்டப்படாத நிகழ்வுகளால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளுக்கும், பாதிப்புகளுக்கும் மத்தியில் மக்களிடையே ஓர் சுமுகமான நிலையை ஏற்படுத்தவும், அமைதியையும் சமாதானத்தையும் நிலைப்படுத்தி மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும்கூடிய அளவுக்கு நியாயமான, நீதியான தீர்வுகளை அவ்வப்போது எடுத்துக்கூறி வந்துள்ளீர்கள்.

நன்மை பயக்கக்கூடிய சில அமைதிப் போராட்டங்களையும் தாங்கள் முன்னின்று நடத்துகிறீர்கள். இவற்றை பத்திரிகைகள் மூலமாகவும் வானொலி வாயிலாகவும் அறியக்கூடியதாக இருந்தது.

தங்களின் இந்தப் புனிதமானதும், நன்மை பயக்கக் கூடியதுமான சேவை தொடர வேண்டும். அதில் ஒரு பூரண வெற்றி கிடைக்கவும் இறைவனை வேண்டுகிறோம். தங்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வகையில் கைதிகளாகிய நாங்கள் எடுத்துக்கூறும்பட்சத்தில் தங்களால் எங்கள் நிலைக்கு ஏற்படுத்தித் தரக்கூடிய மனிதாபிமான ரீதியிலான உதவிகளைக் காலக்கிரமத்தில் செயற்படுத்தித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு இம்மகஜரைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

அரசியல் நெருக்கடிகளும் பொருளாதாரச் சீர்கேடுகளும் நிறைந்த இக் காலகட்டத்தில் நாங்கள் எல்லோரும் அணு

தைகளாக்கப்பட்டுள்ளோம், ஏன் எங்கள் குடும்பங்களே—

எதுவுமற்றவர்களாக நிர்க்கதியாக்கப் பட்டுள்ளார்கள்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் மிகவும் கஷ்டமானதொரு வாழ்க்கையை நடத்துகின்றார்கள்.

உங்களின் செயற்பாடுகளின் பெரும்பகுதி அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளில்தான் நிலைப்படுத்தப்படுகின்றது என்பதை நாங்கள் அறியாதவர்களல்லர்.

இருந்தும் எங்களினதும் குடும்பங்களினதும் இக்கட்டான நிலையைத் தங்களுக்கு எடுத்துக்கூறுவதில் எங்களுக்காக நீங்கள் சிரத்தையுடன் தங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட உதவிகளைத் துரித கெதியில் செய்துதரும் பட்சத்தில் எங்களின் கஷ்டநிலை ஓரளவு நீங்குமென்ற விசுவாசம் எங்களிடையே பூரணமாக உண்டு.

வேதனை விரக்தி

எங்கள் நிலைபற்றிக் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு யாழ்அரச உயர் அதிகாரிகளுக்கும் பிரஜைகள் குழுவினருக்கும், கோப்பாய் உதய தாரகை விழிப்பு மன்றத்திற்கும் தெரிவித்திருந்தோம் (இரண்டு தடவை பதிவுத் தபால் மூலம்).

பொறுப்பு வாய்ந்த எமது அரச உயர்அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும் ஏனோ, தானோ என்ற நிலைப்பாட்டினாலும் பிரஜைகள்குழு விழிப்பு மன்றத்தின் மந்தமான செயல்களினாலும் அவ்விண்ணப்பங்களுக்குரிய பதில் கடிதங்களாவது இவ்விடம் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

இவர்களின் இச்செய்கைகள் கைதிகளாகி எமது மனதில் வேதனையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளிடை மலையாகும்

இங்கிருக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களின் கைதிகளும் எங்களைப் போன்று விண்ணப்பங்களை அனுப்பி இருந்தார்கள்.

அந்த மாவட்ட அரச உயர் அதிகாரிகள் பிரஜைகள் குழுவினர், புனர்வாழ்வு கழகங்கள் அவ்விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு உடனடியாக அந்த இணைப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டன.

இங்குள்ள கைதிகளின் நெருங்கிய, உறவினர்கள் அரசாங்க செலவின் பாதுகாப்போடு (பஸ்செலவு, பயணச்செலவு) வந்து கைதிகளைப் பார்வையிட முடிந்தது.

கைதிகளின் அத்தியாவசிய தேவைப் பொருள்களான உடுப்புகள், சவர்க்காரம், பல்துலக்கி பற்பசை, எழுதும் தாள் பேனா, என்வலப் முத்திரை, சொறிகடிகளுக்குரிய வில்லைகள் என்பன வற்றையும் இங்கு கொண்டுவந்து கொடுத்துள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கஷ்டங்களும் நெருக்கடிகளும் நிறைந்த சூழ்நிலையில் கைதிகளாகிய அவர்களையும் மனிதாபிமான ரீதியில் அணுகி இந்த அளப்பரிய உதவிகளை அவர்கள் பெருமனதுடன் செய்துள்ளார்கள், இது யாழ்மாவட்டத்தினராகிய எமக்கு மிகவும் வேதனையையும் துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ்மேற்றிராசனம்

எனினும் நாங்கள் எங்கள் நிலைபற்றி யாழ்/மேற்றிராசன பொருளாதார சமூக முன்னேற்ற கழக இயக்குநர் வணதந்தை பயார் அவர்களுக்கு தெரிவித்தவுடன் அந்த ஸ்தாபனம் (S.E D.E.D) எங்கள் ஒவ்வொருவருக்கும் அதாவது முழு அளவிலான 699 கைதிகளுக்கும் உடுப்பு பார்சல் வழங்கியதை இங்கு மிகவும் நன்றியறிதலுடன் குறிப்பிட விரும்புகின்றோம்.

அவர்களின் இப்பெருந்தன்மையான செய்கையால் ஏனைய மாவட்ட கைதிகளாகிய நண்பர்களின் பரிகசிப்பு நிலையிலிருந்து சற்று விடுபட்டு இருக்கின்றோம். (பரிகசிப்பு என்பது யாரையும் குறைவு படுத்துவதல்லசிறையில் நடக்கும் சாதாரண சம்பவமே)

குடும்பக்கஷ்டம்

இங்கு அனேகமாக இருக்கும் கைதிகளில் பலர் குடும்பஸ்தவர்களே. அவர்கள் சிறைவாசம் அனுபவிக்கும் பட்சத்தில் அவர்களில் தங்கி உள்ள குடும்பங்கள் மிகவும் துன்பமான கஷ்டமான ஒரு பரிதாபகரமான நிலைகுத்தள்ளப்பட்டுள்ளன.

அநேக குடும்பங்களில் அன்றடசாப்பாட்டுக்கே கஷ்டப்படும் அதேவேளை பிள்ளைகளின் கல்வி வசதிகளைக் கூட செய்து கொடுக்க முடியாத நிலையில் அவர்களின் எதிர் காலங்களும் பாதிக்கப் பட்டுள்ளன.

ஆனால் ஏனைய குறிப்பிடப்பட்ட மாவட்டங்களின் அரச உயர் அதிகாரிகளினதும் தங்களைப் போன்றோரினதும் மத பொதுஸ்தாபனங்களினதும் விடா முயற்சியால் பொது மக்களிடமிருந்தும் அரசாங்க சமூக சேவைப் பகுதியிடமிருந்தும் புனர் நிர்மாண அமைச்சிடமிருந்தும் வெளிநாட்டு ஸ்தாபனங்களிடமிருந்தும் நிவாரணங்களை பணமாகவும் பொருள்களாகவும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

இந்தவகையில் யாழ் மேற்றிராசன (S. E. D E. C.) ஸ்தாபனம் யாழ் நகரில் இயங்குகிற பயர் களின் சில குடும்பங்களுக்கு அந்த பகுதியிர ப குத்தந்தையர் மூலம் சில உதவிகளைச் செய்துள்ளதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

எனவே ஐயா! எங்களின் இந்த விண்ணப்பத்தை மற்றைய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் போல் உதாசீனம் செய்யாதுதங்கள்சிரமேற்கொண்டு எங்கள் குடும்பங்களினதும் வறுமை நிலையைப் போக்கவும் இவ்விடம் எங்கள் மன ஆதங்கத்தைப் போக்கவும் கூடிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி செய்து உதவி புரிந்து எங்கள் மன ஆதங்கத்தை போக்கும் வண்ணம் மிகவும் தாழ்மையுடனும் பணிவுடனும் வேண்டுகின்றோம்.

தங்களிடமிருந்து ஒரு நிறைவான பதிலை மிகவும் விரைவில் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

கைதானவர்....

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட நூற்றிஐம்பதுக்கும் அதிகமானவர்கள் 29 ஆம் திகதி விடுதலை செய்யப் பட்டனர், (-150)

அகதிகளை

மீளக்குடியமர்த்த புதிய திட்டம்

கொழும்பு ஜூலை 5

அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்கு புதிய திட்டம் ஒன்று வகுக்கப் பட்டிருப்பதாக புனர் வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் லயனல் ஜெயதிலக தெரிவித்தார்.

வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய போது அமைச்சர் மேலும் சொன்னதாவது,

அகதிகளுக்கு உதவுவதற்கான திட்டத்தின் கீழ் வழங்கும் நன்கொடை நூறு சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. இனி 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இதுவரை சுமார் 33 ஆயிரம் அகதிகள் இந்தியாவில் இருந்து திரும்பி உள்ளனர்.

வாரம் தோறும் சுமார் 500 பேர் இந்தியாவில் இருந்து வந்து கொண்டிருக்கின்றனர்.

வன்செயல்களில் உயிரிழந்தவர் காயமடைந்தவர் ஆகியோருக்கு 3 ... நஷ்ட ஈடாக வழங்கப் பட்டுள்ளது.

புனர்வாழ்வுக்கு எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது என்பதை சரியாகக் கூறமுடியாது. எவ்வளவு அகதிகள் மீளக் குடியமர்த்தப்பட்டனர் என்பதையும் சொல்ல முடியாது.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் புனர்வாழ்வு அமைச்சு உதவி வழங்கும்.

இவ்வாறு அமைச்சர் லயனல் ஜெயதிலக தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிவிட்டது!
வெப்பவியல்
Sat & Sun: 12.45 - 1.45
பொறியியல்
Thu: 2.30 - 4.30
ஆசிரியர்:
திரு. மணியம் B.Sc. (Hons)
3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

உதயன்
05 - 07 1988 செவ்வாய்க்கிழமை

A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு
பௌதிகவியல்
மீட்டல் வகுப்பு ஆரம்பம்: 5-7-88
Tue. 4.00 - 6.00 p.m.
ஆசிரியர்:
Mr. மணியம் B.Sc. (Hons)
3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,

அரசுக்கு எச்சரிக்கை

வடக்கில் கடைப்பிடித்ததை தெற்கில் கையாண்டால் நிலைமை மோசமடையும்

கொழும்பு, ஜூலை 5
வடக்கில் கடைப்பிடித்த நடைமுறைகளை தெற்கிலும் அரசு கடைப்பிடிப்பின் இலங்கை நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடையும்.

இவ்வாறு பொதுநல ஸ்தாபனங்கள் பலவும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் பாதுகாப்புப் படையினர் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் சட்ட அங்கீகாரம் வழங்கும் சட்டத்தை உடனே விலக்கிக்கொள்ளும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இந்த ஸ்தாபனங்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளன.

பொது விழிப்புணர்வுக் கமிட்டி முதல் சிவில் உரிமைப் பாதுகாப்புக் கமிட்டி உட்படப் பல மனித உரிமைச் சங்கங்களே மேற்படி எச்சரிக்கையையும் வேண்டுகோளையும் விடுத்துள்ளன. (ஒ-எ)

மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரியில்

சுன்னாகம் ஜூலை 5
சுன்னாகத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய ஒருவர் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் மயக்க நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் கந்தசாமி என்பவரே விபத்தில் சிக்கியவர் எனத் தெரியவருகிறது. (ஒ-27)

வெளிநாடு சென்று கல்வி பயில

சென்ரல் மாணவர் இருவருக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் இருவருக்கு வெளிநாடு சென்று உயர் கல்வி பயில்வதற்கான புலமைப் பரிசில்கள் கிடைத்துள்ளன.

செல்வன் தி. கிருபராஜன், செல்வன் சலீம் சபீல் ஆகிய இருவருக்குமே மேற்படி புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

செல்வன் தி. கிருபராஜனுக்கு இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கிறிஸ்துவக் கல்லூரியில் பொறியியல் துறையில் பயிற்சி பெறுவதற்காக ''ஒவசீஸ் டெவலப்மெண்ட்'' நிறுவனத்தால் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவத்தலைவராகவும், விஞ்ஞான மாணவ மன்றத் தலைவராகவும் இருந்த இவருக்கு விண்வெளி ஆய்வில் இருந்த ஆர்வத்தைப் பாராட்டி ''நாஸா'' விண்வெளி ஆய்வு நிறுவனம் பல பரிசில்களை வழங்கியுள்ளது.

செல்வன் சலீம் சபீலுக்கு மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் கல்வி கற்பதற்காக ரஷ்ய அரசாங்கத்தால் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

மாணவத்தலைவராகவும், உயர்தர மாணவ மன்றத் தலைவராகவும் கல்லூரியில் செயற்பட்ட இவர், விஞ்ஞான மாணவர் மன்றத்தால் வெளியிடப்பட்ட மத்திய ஆய்வாளன் என்ற சஞ்சிகையின் ஆசிரியராவார். (ஒ-5)

தரமான, தெளிவான, நீண்ட காலம் பாவிக்கக் கூடிய போட்டோஸ்ரற் பிரதி செய்து கொள்வதற்கும்
சகல திணைக்கள, கூட்டுத்தாபன தனியார் நிறுவனங்களுக்குரிய அடையாள அட்டைகள் பிளாஸ்ரிக் கவரிங் (Lamination) செய்து கொள்வதற்கும்
ஞானம்ஸ் ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.
(C. 5630)

NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
90 A/L
WEEKEND CLASSES
Chemistry - 7-30 a.m.
Physics - 8-30 a.m.
Botany - 9-30 a.m.
Zoology - 10-30 a.m.
Pure Maths - 9-30 a.m.
Applied ,, - 10-30 a.m.
(எமது வழமையான ஆசிரியர் குழு)
ஆரம்பம்:
10-07-88 Sunday
(C 5655)

I. E. T. Technical Institute
11, B, STANLEY ROAD, JAFFNA.
(ஸ்டோ தியேட்டருக்கும் முட்டாசுக்கடைச் சந்திக்கும் இடையில்)
✶ எலக்ரிஷன் ✶ ஓட்டோ எலக்ரிஷன்
✶ வெண்டிங் ✶ மெக்கானிக்
பயிற்சியளிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்
ஆரம்பம்: 06 - 07 - 1988
(5154)

இலக்கியத் தேறல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5
அகளங்கனின் ''இலக்கியத்தேறல்'' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை கோப்பாய் ஆசிரிய கலாசாலை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. எம். எஸ். அலெக்சாந்தர் தலைமையுரை நிகழ்த்தவுள்ளார்.

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ந. கனகேஸ்வரன் நூலை வெளியிட்டு வைப்பார். பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றம் ஆதரவில் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. (ஒ-10)

விஸ்வமடுவில் ஞாயிறன்று மோதல்

பதற்றம் தொடர்கிறது

புதுக்குடியிருப்பு, ஜூலை 5
விஸ்வமடுப் பகுதியில் இந்திய அமைதிப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாகத் தெரிய வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இம்மோதல் நடந்தது.

அதைத் தொடர்ந்து விஸ்வமடுப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து கடைச் சொந்தக்காரர்கள் கடைகளைத் திறந்த படியே விட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர்.

பிரயாணிகள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். முல்லைத்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனங்கள் இடைநடுவில் திரும்பின.

மோதலின் போது அமைதிப்படை தரப்பில் மூன்று ஜவான்கள் பலியானதாகச் சொல்லப்பட்டது.

தையல் கடை நடத்தும் பெண்மணி ஒருவரும் இச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-126)

சுட்டிபுரத்தில் வாலிபர் சுட்டுக்கொலை!

வடமராட்சி ஜூலை 5
கன்பொல்லை வாலிபர் ஒருவர் சுட்டிபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

கன்பொல்லை, இடைக்குறிச்சியைச் சேர்ந்த பொன்னு ஜெகதீஸ்வரன் (வயது 22, என்பவரே கொலையுண்டவராவர். கொலையைச் செய்தவர்கள் யார் என்பது பற்றிய விவரம் எதுவும் தெரியவரவில்லை. (ஒ - 160)

85க்குப் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் கிடைக்கும்

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை. 5
1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அல்லது அங்கவீனமடைந்தவர்களுக்கும் நிவாரணப் பொதிகள் வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

தற்பொழுது 87 ஆம் ஆண்டுக்கு பின்னர் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களின் குடும்பங்களுக்குமே நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் கடந்த வாரம் முதல் 85 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கவீனம் அடைந்தவர்களுக்கும், மரணமானவர்களின் குடும்பத்தினருக்கும் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணப் பொதிகளை வழங்கி வருகிறது.

அங்கவீனமடைந்தவர்கள் அல்லது மரணமானவர்களின் உறவினர்கள், தகுந்த அத்தாட்சியுடன் உறுதிப்படுத்தி செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து நிவாரணப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே நிவாரணப் பொதிகளை வழங்கியவர்களுக்கு மீண்டும் வழங்கப்படமாட்டாது என செஞ்சிலுவைச் சங்க பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-10)

அமைச்சரவையின் முடிவு ஒரு கண்துடைப்பாகும்

அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5
அடகுவைத்தோருக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக அமைச்சரவை எடுத்திருக்கும் முடிவு ஒரு கண்துடைப்பாகும்.

அடகு நகை வைத்தோர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இதுவரைக்கும் எமது கோரிக்கைகளுக்குசெவி சாய்க்காது காட்டி வந்தபோக்கில் சிறுமாற்றம்மட்டுமே ஏற்பட்டுள்ளது.

அடகு நகைகள் கொழும்புக்கு கொண்டு சென்றது முதல் வட்டி அறவிடக்கூடாது என்பது எமது கோரிக்கைகளில் ஒன்று.

ஆகவே எமது சங்கம் ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுப்பதுஎன்று எடுத்த முடிவை தொடர்ந்தும் மேற்கொள்வது என்று தீர்மானித்துள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

கூட்டணி......

களக் குடியேற்றங்களும் அதன் தாக்கங்களும்.

★ சகல ஈழப் போராளிகளும் அடங்கிய குழு ஒன்று அமைத்து மக்களின் புனர் நிர்மான செயற்திட்டங்களில் ஈடுபடுதல்.

மேற்கண்ட இரு விடயங்களும் முக்கியமாக ஆராயப்பட்டிருப்பதாக அறியவந்தது.

அத்துடன் இயக்கங்களுக்கு இடையேயான மோதல்களைத் தவிர்ப்பது பற்றியும் ஆராயப்பட்டது. (ஒ - க)

ஜே. ஆரிடம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இணைப்புக் குறித்து இலங்கை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பிரகடனம் வெளியிடப்பட வேண்டும் என அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அப்பிரகடனத்தை வெளியிடுமாறு ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவை வலியுறுத்தவே திரு. என். ராம் கொழும்புக்கு அவசரமாக வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை, இந்திய அரசுத் தலைவர்களிடையே இணக்கமான நிலையை உருவாக்கி இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்காகப் பின்னணியில் நின்று செயற்பட்ட முக்கிய பிரமுகர்களில் திரு. ராமும் ஒருவர் என்பது

வடக்கு, கிழக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
னம், ஆப்கானிஸ்தானுக்கு, அங்கு மறு வாழ்வுப் பணிகளுக்கென மாற்றி விட்டது.

மிகுதி ஆறு கோடி டாலரையும் ஆபிரிக்காவுக்கு மாற்ற உத்தேசித்துள்ளதாக அறிய வருகிறது.

இத்தகவலை அமெரிக்க நிதி உதவிகளுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் கொழும்பில் வைத்து யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடந்த பல வருடங்களாக நடந்த இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களை அமெரிக்கநிதிஉதவி அமைப்பு மதிப்பிட்டிருந்தது.

அதன் அடிப்படையிலேயே வளர்முக நாடுகளுக்கு உரிய 1988 ஆம் ஆண்டிற்கான நிதிஒதுக்கீட்டில் வடக்குக்கிழக்குப் பகுதிகளின் புனர் நிர்மாணத்துக்காக 9கோடி அமெரிக்க டாலரை ஒதுக்கியிருக்கது.

அமெரிக்கா....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், ''இது ஒரு துயரச் சம்பவம்'' எனக் கூறினார்.

அமெரிக்க கடற்படைத் தளபதி செய்தியாளரிடம் கூறுகையில், ''போர் விமானம் என்று கருதியே தவறுதலாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் செயலை உலக நாடுகள் கண்டித்துள்ளன.

சோவியத் யூனியனும் கண்டித்தது. மனித நாகரீகத்துக்கு முரணான செயல் என்று மாஸ்கோ வானொலி அறிவித்தது.

சம்பந்தப்பட்ட அமெரிக்கப் போர்க்கப்பலில் பொருத்தப் பட்டுள்ள நவீன ''ராடர்'' கருவி மற்றும் சாதனங்கள் துணையுடன் பயணிகள் விமானத்துக்கும், சண்டை விமானத்துக்கும் உள்ளவேறுபாட்டை கண்டு பிடிக்கமுடியாமற் போனது குறித்து பிரிட்டிஷ் ராணுவ வட்டாரங்கள் அதிருப்தியும் ஆச்சரியமும் தெரிவித்தன. (ஒ-எ)

மினி பஸ்ஸில் திருடி!

யாழ்ப்பாணம் ஜூலை 5
மினி பஸ்ஸில் பிரயாணம் செய்த பெண்மணி ஒருவரிடம் சங்கிலியைக் களவாட முயன்ற மற்றொரு பெண் ஏனைய பிரயாணிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இச் சம்பவம் நேற்று பலாலி வீதியில் நடைபெற்றது.

சங்கிலியைக் களவாட முயன்ற பெண் வாகன உரிமையாளர்களினால் நையப் புடைக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டார். (ஒ-10)

ரூ. ஒரு லட்சம் பெறுமதியான உடைமை மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 5
சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்கள் கோண்டாவில் பகுதியில் கிடங்கு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதுடன், திருடர்களும் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டனர்.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்க இளைஞர்களே இந்தப் பொருள்களை மீட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களில் வீடுகளில் இருந்து திருடப்பட்ட தொலைக்காட்சி, வைத்திய சோதனைப் பொருள்கள் உடைகள். வீட்டுத்தளபாடங்கள் போன்றவை இதனுள் இருந்தன.

இதற்கு முன்னரும் இந்தச் சங்கம் சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

இயக்கங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

புளொட்டின் சார்பில் வவுனியா நகரப் பொறுப்பாளர் வசந்தன், அரசியல் பிரமுகர் விசு ஆகியோரும் ஈ. பி. ஆர். எல். எவ்வின் சார்பில் வரோதயமும், ரெலோ சார்பாக வவுனியா தளபதி குகன், அரசியல் பொறுப்பாளர் உதயன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் இயக்கங்களுக்கு இடையேயான மோதல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெலோ இயக்கம், ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே. (ஒ)

ஆறு.........,

லப்பட்டது.

யாழ். மாவட்டம் வரவிருந்த ஆறு நாடுகளின் தூதுவர்களும் தத்தமது நாட்டில் உள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது சம்பந்தமாக தமது அரசுகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு இங்குள்ள நிலைமைகளை பார்வையிட இருந்தனர்.

இதேவேளையில் பிரஸ்தாப வெளிநாட்டுத் தூதுவர்கள் குழு ஏற்கனவே இருமுறை இங்கு விஜயம் மேற்கொள்ள இருந்து முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. (ஒ-?)

மில்லரின்...

ஜூலை 5ஆம் திகதியை நினைவு கூருவோம்'' என்ற தலைப்பில் நெல்லியடி வர்த்தகர் சங்கம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நெல்லியடி வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்பட்டு வர்த்தகர்கள் இரத்ததானம் செய்வார்கள் என்றும்-

மேலும் உயிர்ச்சேதம் உடைமைச் சேதம், மனித சக்தி விரயம் போன்றவை ஏற்படாமல் இருக்க இறைவனை வேண்டி விசேட சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் கப்டன் மில்லருக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட் (160-69)

யாழ்நகரில் டிராக்டர் கடத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ் ஆஸ்பத்திரியின் பின்னால் நிறுத்தப்பட்டிருந்த டிராக்டர் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இனந்தெரியாத சிலர் கத்தியைக் காட்டியே டிராக்டரைக் கடத்திச் சென்றனராம்.

மேற்படி சம்பவம் பற்றி ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப டிராக்டர் தனியார் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் கத்தி சகிதமாக வந்த சிலர், காவலாளியை மிரட்டி டிராக்டரை எடுத்துச் சென்றுள்ளனர்.

சைக்கிள் திருட்டு, மோட்டார் சைக்கிள் திருட்டு என்ற நிலையுடன் இப்பொழுது டிராக்டரும் கடத்தப்படுகிறது. (ஒ - 5)

9 ஆவது நினைவு அஞ்சலி

திரு. S.P. குருசாமி
(பொலீஸ் இன்ஸ்பெக்டர்)
மண்ணின் மடியில்:
15- 11- 1922
மக்களின் மனங்களில்:
1- 7- 1979
எம் குடும்ப ஒளி விளக்கே
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
தாங்கள் ஏற்றிவைத்த தீபங்கள்
இன்னும் எம் நெஞ்சங்களில்
ஒளி தந்துகொண்டே இருக்கின்றது.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.
மனைவி, மகள், பேரப்பிள்ளைகள், ரமேஸ், பிரகாஸ், ஆகாஸ், பிரதீஸ், சபேஸ்.
ஒட்டுமடம்.
(5172)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 05 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org